1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது

Tele { grams: "CATHOLIC PRESS, JAFFNA."
Tele { phone: No. 100.

# சத்திய வேத பாதுகாவலன்

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

79-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1954-ம் ஆண்டு ஆடி மாதம் 29-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 29-ம் இலக்கம்

## சுதேச வர்த்தமானம்

### காலநிலை

சென்றஇருதினங்களாகக் கடுங்குளிரோடுகூடியகாற்று உரமாக வீசிக்கொண்டிருக்கிறது. அதிகம் மப்பும் மந்தாரமுமாய்க் காணப்படினும்மழை பெய்வதாயில்லை.

### தூத்துக்குடி மேற்றிராணியார்

கொழும்பிலே புறக்கோட்டையிலுள்ள அர்ச். பிலிப்புநேரியார் கோவிலிலே பாதகுலமக்களால் பனிமயமாதாதிருநாள் வருகிறஆவணிமாதம் 8-ந் திகதி வழமைபோலக் கொண்டாடப்படவிருக்கிறது. இன்று ஆரம்பமாகும் திருவிழாக்களிலே தமிழிலும், திருநாளன்று ஆங்கிலத்திலும் பிரசங்கங்கள் செய்யத் தூத்துக்குடி மேற்றிராணியாரான மகாவந். தோமஸ் பெர்ணண்டோ ஆண்டவர் நேற்றுப் புதன்கிழமைகாலை தலைமன்னார் றெயின்வழியாகக் கொழும்புக்கு வந்திருக்கின்றார். அவர்கோட்டைறெயில்வேஸ்ரேஷனில் இறங்கியதும் சேர் டொனேஷியஸ் விக்ரோறியா அவர்கள் பெருந்திரளான மக்கள்சமேதராய்க் காத்துநின்று புஷ்பாஞ்சூட்டி அவரை வரவேற்றார். ஆண்டவர்அவர்களின் முதலாவது இலங்கைவிஜயம் இதுவாகும். வருகிற ஞாயிற்றுக்கிழமை கொட்டாஞ்சேனையிலுள்ள சென் பெனெடிற் கல்லூரி மண்டபத்திலே பாதகுலமக்கள் அவருக்குப் பரிமளிப்பான ஓர் வரவேற்பளிக்க விருக்கின்றார்கள்.

### முன்னாள்பிரதமரின் உருவச்சிலை

இலங்கையின் முன்னாள்பிரதமரான திரு. டி. எஸ். சேனநாயக அவர்களின் உருவச்சிலையைச் செய்வதற்கென்று ஆங்கிலேய பிரபலசிற்பியான ஜேம்ஸ் வூட்என்பவருடன் சென்றசனிக்கிழமை ஒப்பந்தம்ஒன்று நடைபெற்றிருக்கிறது. லண்டன் நகரிலுள்ள இலங்கைமாளிகையில் நடந்தேறிய இந்த ஒப்பந்தத்திற்கு இலங்கை அரசாங்கத்தின்போரால் சேர் குளோட் கோறியா அவர்கள் கைச்சாத்திடலாயினர். சிலையைச்செய்யும் சிற்பிக்கு 8,000 பவுண் கொடுபடுமெனத் தெரியவருகிறது.

### பலாப்பழத்தால் நேர்ந்தது

மாத்தறையிலே சென்ற சனிக்கிழமை ஈ டன்னி, டி. கே. கருணதாசா எனுமிருவருக்குமிடையே ஓர்பலாப்பழத்தையிட்டு ஏற்பட்டஓர்சச்சரவின்போது, டன்னிஎன்பவன் கருணதாசாவின் காதைக் கடித்தெடுத்து வாயினுள் வைத்துக்கொண்டான். அதை வெளியே துப்பிவிடும்படியாக அவனுடையஇனசனர் சொல்லிப்பார்த்தும் அவன் அதைக்கேளாது கடித்தெடுத்த காதை அந்தப்படியே நன்றாகச்சப்பி விழுங்கிவிட்டானாம். கருணதாசாவுக்கு கடுங்காயம் உண்டுபண்ணினானென்று குற்றஞ்சாட்டி மாத்தறை நீதிஸ்தலத்தில் அவன்மீது வழக்குத் தொடப்பட்டிருகிறது.

### குருப்பட்டாபிஷேகம்

வல்வெட்டித்துறைவாசரும், ரெவிகிரல் இன்ஸ்பெக்ராயிருந்து இளைப்பாறியவருமான திரு. எஸ் செபஸ்ரியன் அவர்களின் புதல்வரான வண. எஸ். ஈ. விஜயரட்ணம் பிறதர்அவர்கள் கொழும்பிலே நகேகொடையிலுள்ள அமலோற்பவ மரியநாயகிசபைக் குருமடத்துச் சிற்றாலயத்தில் கொழும்பு அதிமேற்றிராணியாரான மகாமேன்மைதங்கிய தோமஸ் கூறே ஆண்டவர் அவர்களால் அடுத்துநிகழும் ஆவணி மாதம் 4-ந் திகதியாகிய வருகிறபுதன் கிழமைகாலை குருத்துவாபிஷேகஞ் செய்யப் பெறவிருக்கின்றார். பிறதர் அவர்கள் தமது குருத்துவபதவியைத் தேவனுக்குத் தோத்திரமாகவும், ஆன்மாக்களின் இரட்சணியத்துக்காகவும் சிறப்பாக வகித்துவரும்படியாக அச் சுபசந்தர்ப்பத்தில் அவருக்காக மன்றாடிக்கொள்வோமாக!

### புதியகட்சி இல்லை

முன்னாள்பிரதமர் திரு. டட்லி சேனநாயகஅவர்களும், கல்விமந்திரியாரான திரு. எம். டி. பண்டாஅவர்களும் சேர்ந்து ஓர்புதியகட்சியைஅமைக்க நடவடிக்கைஎடுத்துவருவதாகச் சிலகாலமாய் ஓர்செய்திபரவலாயிற்று. அதனால் இதுவிஷயமாய் ஐக்கியதேசியகட்சி (யு. என். பி.)யின் பொதுக்காரியதரிசியான சேர் உக்குவத்தை ஜயசுந்தராஅவர்கள் இதன் உண்மையை அறிந்துகொள்ளவிரும்பி இருவருக்கும் கடிதங்கள்எழுதியிருந்தார். அவற்றிற்கு அவர்கள்அளித்தபதிலிலே, தாங்கள் அப்படியான ஒருகட்சியை அமைக்க நடவடிக்கைஎடுத்துக்கொள்வதாகப் பரந்தசெய்தி உண்மையல்லவென்று தெரிவித்திருக்கிறார்கள்.

### மந்திரியாரின் விஜயம்

உணவு–கமத்தொழில் மந்திரியாரான திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன அவர்கள் நாளைவெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்துக்கு விஜயஞ்செய்ய விருக்கின்றார். அவர் நாளைக்காலை விமானமார்க்கமாக யாழ்ப்பாணம் வந்துசேர்ந்து நாளைத்தினமும், மறுநாளும் நீகல்தியேற்றரில் கூடவிருக்கும் வடபகுதிக் கூட்டுறவுமகாநாட்டை நாளைக்காலை 10 மணிககு ஆரம்பித்து வைப்பார். சாயந்தரம் இராமநாதன் கல்லூரிக் குடும்பநிர்வாக சாஸ்திர கூட்டதைதை ஆரம்பித்துவைத்து மறுநாள் கொழும்புக்குத் திரும்புவார்.

### ஆயுள்வேத வைத்தியம்

லெனேறு வைத்திய அறிக்கையைப் பரிசீலனைசெய்வதற்காகக்கூடிய ஓர்மகாநாட்டிலே ஆயுள்வேத வைத்தியத்தின் தரத்தைத் திருத்துவதெனச் சுகாதார மந்திரி காரியாலயம் தீர்மானித்திருக்கிறது. இதுவிஷயமாய் ஆயுள்வேத அவுஷதபாகமுறையில் ஆராய்ச்சிநடத்துவதற்கென வைத்திய ஆராய்ச்சிஸ்தாபனத்தில் வேறாகஓர்பகுதியை அமைக்க வேண்டுமென்றும், சுதேசவைத்திய கல்லூரியிலும், வைத்தியசாலையிலும் திருத்தங்கள் செய்யும்விஷயமாய் ஓர் உபகம்மிற்றியை நியமிக்க வேண்டுமென்றும் ஆலோசனை கூறப்பட்டிருக்கிறது.

### திருச்சுருப ஸ்தாபகம்

ஆனையிறவிலே சந்தானுள்நாயகியின் திருநாள் ஆவணிமாதம் 1-ந் திகதியாகிய அடுத்தஞாயிற்றுக்கிழமை கொண்டாடப்பட விருக்கிறது. முதநாள் சனிக்கிழமைமாலை வேஸ்பர்பாடியபின் அர்ச். கிறிஸ்தோப்பரின் சுரூபம் ஒன்று ஆசீர்வதிக்கப்பெற்று, ஆனையிறவுப்பாலத்துக்குத் தென்புறமாகக் கால்மைல்தூரத்தில் அமைக்கப்பட்டிருக்கும் சேத்திரம்ஒன்றுக்கு ஊர்வலமாகக்கொண்டுசென்று ஸ்தாபிக்கப்படவிருக்கின்றது. அதனால் கார்களிலும், பஸ்களிலும், மற்றும் ரதங்களிலும் ஆனையிறவு வீதிவழியாகப் பிரயாணஞ் செய்கிறவர்கள் பிரயாணிகளின் பாலோகபாதுகாவலரான அர்ச். கிறிஸ்தோப்பரின் பாதுகாவலைஇரந்து தங்கள் பிரயாணத்தைச் சேமமாகநடத்தச் சந்தர்ப்பம் ஏற்படவிருக்கிறது.

### கொழும்பு நகரசபைத்தேர்தல்

கொழும்பு நகரசபைப் புதிய அங்கத்தவர்களின்தேர்தல் சென்றசனிக்கிழமை ஒருவாறுநடந்துமுடிந்தது. 31 ஸ்தானங்களுக்கும் 83 அபேட்சகர்கள் போட்டியிட்டுநின்றார்கள். இவர்களிலே ஐக்கியதேசியக்கட்சி(யு.என்.பி.) 25 பேரையும், கம்யூனிஸ்த – லங்கா சமசமாஜ ஐக்கிய முன்னணிக்கட்சி 15 பேரையும், லங்காசமசமாசகட்சி 10 பேரையும், தொழிற்கட்சி 4 பேரையும் நிறுத்தியிருந்தன. இடதுசாரிகளால் ஆதரிக்கப்பட்ட ஆறுபேர்உட்படச் சுயேச்சைஅபேட்சகர்களாய் 29 பேர் முற்பட்டுநின்றார்கள். தேர்தல்முடிந்து அன்றிரவுதானே வாக்குச்சீட்டுகள் எண்ணப்பட்டன. அதன் முடிவாக ஐக்கியதேசியக் கட்சிக்குப் பெரும்பான்மையான ஸ்தானங்கள் கிடைத்தன. மொத்தமான 31 ஸ்தானங்களிலும் ஐக்கியதேசியக்கட்சிக்குப் 12 ஸ்தானங்களும், ஐக்கியமுன்னணிக் கட்சிக்கு 6 ஸ்தானங்களும், லங்கா சமசமாசகட்சிக்கு 6 ஸ்தானங்களும், தொழிற்கட்சிக்கு 2 ஸ்தானங்களும், சுயேச்சைவாதிகளுக்கு 5 ஸ்தானங்களும் கிடைத்தன.

### வரைதல் தராதரப்பரீட்சை

ஆசிரியர்களுக்கான வரைதற் தராதர பத்திரபரீட்சை வருகிறஐப்பசிமாதம் நடைபெறவிருக்கின்றது. அதற்கான விண்ணப்ப பத்திரங்கள் வருகிற ஆவணிமாதம் 27-ந் திகதிக்கு முன் அனுப்பப்படவேண்டும். விண்ணப்ப மாதிரிப்பத்திரங்களும், விதிகளும் தபால்மூலம் பெறவிரும்புவோர் வருகிறஆவணி 2-ந் திகதிமுதல் 10-ந்திகதி வரையிலும், நேரிலே பெறவிரும்புவோர் 12-ந் திகதிமுதல் 21-ந் திகதி வரையும் பெற்றுக்கொள்ளலாம்.

### குறைந்தவிலையில் அரிசி

உணவு–கமத்தொழில் மந்திரியாரான திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன அவர்கள் சென்ற சனிவாரம் கொழும்பிலே குவாலி – கிளேறிக்கல்சேவை ஐக்கியசங்கத்தில் பேசியபோது: இந்தோசீனாவில் யுத்தநிறுத்தஞ் செய்யப்பட்டதோடு நெல்லரிசி உற்பத்திசெய்யும் பகுதிகளிலிருந்து அதிகங்குறைந்த விலையிலே அரிசிவாங்கக் கூடியநிலைமையிருக்குமெனக் கூறியிருக்கின்றார்.

### பொலிஸ்இன்ஸ்பெக்றர் ஜெனறல்

வடபகுதியிலுள்ள பொலிஸ் ஸ்ரேஷன்களைப் பார்வையிடுவதற்காகப் பொலிஸ்இன்ஸ்பெக்றர்ஜெனறல் சேர் றிச்சேட் அலுவிகாரை அவர்கள் இன்றுகாலை யாழ்ப்பாணம் வந்திருக்கின்றார். இவர் வருகிறதிங்கட்கிழமைவரையிலே இங்குதங்கியிருப்பார். அதற்கிடையில் முல்லைத்தீவு, வவுனியா, கிளிநொச்சி முதலாம் இடங்களிலுள்ள பொலிஸ் ஸ்ரேஷன்களையும் பார்வையிடுவார். யாழ்ப்பாணத்தில் கட்டப்படவிருக்கும் புதியபொலிஸ் ஸ்ரேஷனுக்கும், விடுதிக்கும் அத்திவாரக்கல் நாட்டுவார். சனிக்கிழமை யாழ்ப்பாணடிஸ்திறிக்கிலுள்ள பொலிஸ்காரரின் அணிவகுப்பு ஒன்றைப் பார்வையிடுவார்.

### மூரசுமோட்டைக் குடியேற்றம்

காணியில்லாத கமக்காரருக்கு இரணைமடுத்திட்டத்தின்கீழ் மூரசுமோட்டையிலே குடியிருப்பதற்கென ஒருஏக்கர் நிலமும், நெற்செய்கைக்கென மூன்றுஏக்கர்நிலமும் இலவசமாகக்கொடுக்கும் புதியதிட்டம்ஒன்றை அரசாங்கம் வகுத்திருக்கின்றது. (1) தென்மராட்சி, பச்சிலைப்பளி, கரைச்சி வடமராட்சி, (2) வலிகாமம்வடக்கு–கிழக்கு– மேற்கு, யாழ்ப்பாணம், (3) தீவுப்பற்று ஆதியவிடங்களில் நிரந்தரமாக வசிப்பவர்களும், விவாகஞ்செய்து பிள்ளைகளையுடையவர்களும், காணியற்றவர்களுமான கமக்காரருக்கே அங்கு காணிகள்வழங்கப்படும். இதற்கெனத் தென்மராட்சி, பச்சிலைப்பளி, கரைச்சி, வடமராட்சிக்குப்பொதுவாக ஆவணி 2-ந்திகதியும், வலிகாமம் வடக்கு–கிழக்கு – மேற்கு, யாழ்ப்பாணத்திற்குப்பொதுவாக ஆவணி3-ந்திகதியும், தீவுப்பற்றுக்குப் பொதுவாக ஆவணி4-ந்திகதியும் காணிக்கச்சேரிகள் நடைபெறவிருக்கின்றன.

### பிரதமரின் விஜயம்

பிரதமர் சேர்ஜோண் கொத்தலாவலஅவர்கள் வருகிற புரட்டாசிமாதத் தொடக்கத்திலே யாழ்ப்பாணத்துக்கு விஜயஞ்செய்யவிருக்கின்றார். அவர் சாவகச்சேரிப்பகுதிக்கு விஜயஞ்செய்யும்போது அவரை வரவேற்பதற்கான ஏற்பாடுகளைப்பற்றி ஆலோசிப்பதற்காக ஆவணி 1-ந் திகதியாகிய வருகிற ஞாயிற்றுக்கிழமை ட்றீபேர்க்கல்லூரி மண்டபத்தில் ஓர்பகிரங்க கூட்டம் நடைபெறவிருக்கின்றது.

### வடமராட்சி சுகாதாரவிழா

சென்ற 24-7-54 சனிக்கிழமை பிற்பகல் புலோலி இந்துமகளிர் கல்லூரியில் வடமாகாண உதவிஅதிபர் ஏ.எஸ். நவரத்தினராசா அவர்கள் தலைமையில் சுகாதாரவிழாக் கொண்டாட்டம் விமரிசையாக நடந்தேறியது. இதில் வடமராட்சித் தமிழ்ப்பாடசாலைகள் பல பங்குபற்றின அப்போது நிகழ்ந்த பாட்டு, நடன, நாடகப்போட்டிகளில் வதிரி தெற்குக் கத்தோலிக்கப்பாடசாலையே மூன்றுமுதலிடங்களையும் வகித்து அவற்றிற்குரிய வெள்ளிக்கிண்ணங்களைப் பெற்றுக்கொண்டது.

— நிருபர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# பல தேசங்களில்

## அமெரிக்க புதியதபால்முத்திரை

அமெரிக்கமக்களின் நம்பிக்கையின யும், சுதந்திரத்தினையும் சின்னங்களை உலக முழுவதும் கொண்டுசெல்லும் புதியஆகாயத் தபால்முத்திரை ஒன்றை அமெரிக்க ஜனாதிபதி ஐஸன் ஹாவர் வெளியிடச்செய்திருக்கின்றார். இந்த முத்திரையிலே அமெரிக்கஐக்கிய தேசியவிருது மொழியாகிய "நாம் கடவுளில் நம்பிக்கைவைக்கிறோம்" எனும் சுலோகமானது அதிற் காணப்படும் அமெரிக்க சுதந்திரசிலைப் பிரதிமைக்கு மேலாக வில்லைவாய் அமைந்திருக்கிறது. முத்திரையின் அடிப்புறத்திலே "சுதந்திரம்" எனும்மொழி வரையப் பட்டுத் துலங்குகின்றது. அதன்மேற் புறத்திலே "யு. எஸ். தபால்முத்திரை 8 டலர்" என்று பொறிக்கப்பட்டிக்கிறது.

## இரும்புத்திரைக்குப் பின்னாலிருந்து

தொழிற்சாலைக் கூட்டம் ஒன்றிலே கம்யூனிஸ்த பேச்சாளர்ஒருவர் ஓர் தொழிலாளியைவிழித்து: "கம்யூனிஸ்தர்கள்இங்கு அதிகாரத்துக்குவருமுன் நீ எத்தனைஷேட்டுகள் வைத்திருந்தாய்?" என்றுகேட்டார். தொழிலாளி மறுமொழியாக "இரண்டு" என்றான். மற்றுஞ்சில கேள்விகளுக்குப்பின் இப்போதுதன்னிடம் ஒரேயொரு ஷேட்தான் இருப்பதாக அவன்தெரிவித்தான். அதனுல்சணப்பன்விட்டுக்கோழியைப்போலச் சிக்கிக்கொண்ட அந்தக் கம்யூனிஸ்தபேச்சாளர் அவனைநோக்கி: "தற்போது நீ வைத்திருக்கும் அந்த ஷேட் மிகத்திறமாய் இருக்கவேண்டுமென நினைக்கிறேன்" என்றார். அதற்குத்தொழிலாளி: "இல்லையா! நான் முன்னே வைத்திருந்த ஷேட்டுகள் இரண்டும் கிழிந்து பழுதடைந்தபோக அவற்றில்எஞ்சிய துண்டுகள்கொண்டு தான் அது செய்தது" என்றான்.

## அமெரிக்கரும் சிகறெற்றும்

அமெரிக்க ஐக்கியதேசத்திலே சிகறெற்புகைப்பது குறையத் தொடங்கிவிட்டது. அதற்குக்காரணம், சிகறெற் புகைப்பதாலே "லங் கான்சர்" அதாவது சுவாசப்பைப் புற்றுநோய் உண்டாகிறதென்று கண்டறியப்பட்டமையேயாகும். அதனால் சென்ற 1953-ம் ஆண்டுமுதல் அங்கு சிகறெற்உற்பத்தி விழத்தொடங்கியிருக்கிறது. இவ்வாண்டின் முதலாவது கால்வருடத்திலும் அதன்உற்பத்தி பத்தில் ஒன்று வீதம் குறைந்திருக்கிறது. 27 டக்றர் மாரானும், வைத்திய ஸ்தாபனங்களானும் ஆதரிக்கப்பெற்ற புகையிலைக்கைத்தொழில் ஆராய்ச்சிக்கம்மிற்றி தனது பரிசோதனையின் விளைவாய்ச் சிகறெற் புகைப்பது சுகத்துக்குக் கெடுதிஉண்டு பண்ணுவதில்லையென அறிக்கையிட்டும் அதனை மக்கள் நம்புகின்றார்களில்லை.

## தீபேத்தின் தலாய் லாமா

இம்மாதம் 11-ந்தேதியன்று தலாய் லாமா தீபேத்திலிருந்து செஞ்சீனுவின் தலைநகராகிய பீக்கிங்குக்குப் புறப்பட்டார். அத்துடன் தீபேத்தின் சுதந்திரத்தை அடக்கும் சாவுப்பெட்டியில் கடைசிஆணி அடித்தாகிவிட்டதென்றே சொல்லலாம். ஏறக்குறைய 1,500 வருடங்களாக மதஆட்சியும், தேசஆட்சியுங்கலந்த சுதந்திரநாடாக விளங்கிவந்ததீபேத் கடந்தசிலகாலமாகக் கம்யூனிஸ்தசீனுவின் ஆதிக்கத்தில் படிப்படியாகக் கொண்டுவரப்பட்டது. தெரிந்தோ,தெரியாமலோ இதற்கு இந்தியாவும் உடந்தையாக இருந்துவந்துள்ளது. கடந்தகாலத்திலே தீபேத்தில் இந்தியாவுக்கு வர்த்தகத்துறையில் பல வசதிகள் அளிக்கப்பட்டிருந்தன. ஆனால், சமீபத்தில் தீபேத்விஷயமாகச் சீனுவும், இந்தியாவும் செய்துகொண்ட உடன்படிக்கையின் விளைவாக இந்தியா அந்தவசதிகளையெல்லாம் பறிகொடுத்துவிட்டது. "சீன அரசாங்கத்தின் அழைப்பிற்கிணங்கத் தலாய் லாமாவும், பஞ்சன் லாமாவும் பீக்கிங்செல்லுகின்றனர்" என்று தீபேத்அரசாங்க வட்டாரங்கள் கூறுகின்றன. பீக்கிங்கில் தலாய் லாமாவிற்கென ஒருமாளிகை கட்டப்பட்டிருக்கிறதாம். அவர் அந்த மாளிகையிலேயே தங்கியிருப்பாராம். தலாய் லாமா தீபேத்தின் சமயதலைவரும், அரசருமாவர்.

## அணுக்குண்டுப் பாதுகாப்பு

ஜேர்மனியிலே அமெரிக்கரின் ஆதீனத்திலுள்ள பேர்லின்நகர பகுதியில் அணுக்குண்டுகளிலிருந்து பாதுகாக்கப்படுமாறு பதின்மூன்று மாடிகளைக் கொண்ட கட்டடம்ஒன்று அமைக்கப்படவிருக்கிறது. ஐரோப்பாவில் அமைக்கப்படும் அணுக்குண்டுப் பாதுகாப்பு முதற்கட்டடம் இதுவாகும். யப்பானியதேச ஹிரோஷிமா நகரில் அணுக்குண்டு வீசப்பட்டதிலிருந்து, உருக்குச் சட்டகங்கள் கொண்டு அமைக்கப்பட்ட கட்டடங்களே அணுக்குண்டுகளால் ஏற்படும் பிரமாண்டமான அமுக்கங்களை எதிர்த்து நின்றுபிடித்துச் சமாளிக்குமெனக் கண்டறியப்படலாயிற்று. டக்றர் ஹான்ஸ் ஸ்கோஸ் பேர்க் என்ற மேற்குப் பேர்லின்நகர சிற்பியே இதனை நிர்மாணித்துள்ளனர். இதில் அமைக்கப்படும் இருகோபுரங்களும் அணுக்குண்டு அமுக்கத்தை எதிர்த்து நின்று பிடிக்கத் தக்கனவாம்.

## புற்றுநோய் மூலிகைஆராய்ச்சி

கான்சர்எனப்படும் புற்றுநோயைக் குணமாக்கக் கூடியனவென்று ஆபிரிக்காவிலே தங்கனைக்கா நாட்டிலுள்ள இருசாதியார் பாராட்டிக்கொள்ளுகின்ற இருமருந்துப் பூண்டுகளை லண்டன் நகர கான்சர்ஆராய்ச்சிஸ்தாபனம் பரிசோதனைசெய்து வருகின்றது. கினியா நாட்டைச்சேர்ந்த குறேய்ண்டன் ஞாபக நூதன பொருட்காட்சிச் சாலையிலே கடமைபார்க்கின்ற ஓர்சுவிஸ்தாவர சாஸ்திரியான திரு. பி. ஆ. ஒ. பல்லி அவர்கள் தங்கனைக்காவிலுள்ள வசுகுவா, வாச்சக்காஎனும் இருசாதியாருடனும் நட்புக்கொண்டபோது அவர்களுக்கும் கான்சர்நோய் உண்டாகிறதென்றும், ஆனால் செப்பலம், பொஜெறி எனும் இருவகை மருந்துப்புற்கள்கள்கொண்டு அதுகுணமாக்கப்படுகிறதென்றும் அவர்களது வைத்தியர்கள் மூலம் அறியவந்து, அவ்விரண்டையும் பரிசோதனைக்கென்று லண்டனுக்கு அனுப்பிவைத்தார். மற்றும் அநேக நோய்களுக்கென்று அவர்களிடம் சிறந்தமருந்துகள் இருப்பதாகவும் அவர் தெரிவிக்கின்றார்.

---

● திருவாங்கூர்-கொச்சி அரசாங்க போக்குவரத்துப்பகுதி பஸ்களில் சேவைசெய்ய 100கண்டக்றர்மார் தேவையென்று விளம்பரஞ் செய்யப்பட்டபோது, அந்த 100 இடங்களுக்கும் 8,600 பேர் மனுப்பண்ணியிருக்கின்றனர். இவர்களில் எம். ஏ. பட்டம் பெற்ற 9பேரும், பி. ஏ. பட்டதாரிகள் பலரும் அடங்கியிருக்கின்றனர். ஆரம்பத்தில் ஒரு கண்டக்றருக்கு மாதச் சம்பளம் 30 ரூபா. வேலைநிரந்தரமானல் 35 முதல் 45 [illegible]



# தேம்பாவணியும் செபமாலையும்

(பண்டிதர் C. செல்வரத்தினம்)

## களிகூர்ந்தகாரணிக்கம்

### 5-ம் காரணிக்கம்—9-ம் பிரியதத்தம்

### 49. பாலபோதகர்

அன்று தேவபாலகன் காணமற் போன மூன்றும்நாள், மக்களால் போதகமண்டபம் நிரமபியிருக்கிறது. வேதசாஸ்திரிகளின்முகத்திலே ஊக்கமும், உற்சாகமும் தாண்டவமாடுகின்றன. குழந்தையேசுவும் அவர்களோடு இருக்கிறார்.

"கடவுள் மனிதஅவதாரஞ் செய்தாரோ? இல்லையோ? எனபதுபற்றித்தான் அன்று விவாதம்நடைபெறுகிறது. பலரும் பலவாறுகப் பேசிநிற்கின்றனர். சிலர் பிறந்திருப்பாரென்றும், சிலர் பிறக்கவில்லையென்றும் தங்கள்புத்திக்கடுத்தவகையில் நியாயங்களை எடுத்துக்காட்டியவண்ணம் இருக்கின்றனர்.

படித்தவேதநூலின் துணையைக் கொண்டு அவ்வினுவுக்கு அவர்களால் விடைகாண முடியவில்லை. "வேதநூலை ஆதாரமாகக்கொள்ளின் இரட்சகர் பிறக்கவில்லைஎன்ற முடிபுக்கே வரவேண்டியதாகும்" என்கின்றனர். அதைக்கேட்டலும் திவ்வியயேசு......

"கேட்டலும் இரங்கிஅன்னார்
  கிளத்தலை மறுத்துநீக்க
வேட்டலும் தன்னைக்காட்டா
  மெல்லிசை இரங்குநல்யாழ்
கூட்டலும் கனிபால்மற்றக்
  குளுஞ்சுவை திரட்டிக்காதில்
ஊட்டலும் அனையதீஞ்சொல்
  ஒரென்பான் ஓதலுற்றான்"

திருக்குமாரன் அவர்கள்மேல் இரங்கி அவர்களது பிழையைத்திருத்த விரும்புகிறார். தம்மை இன்னுனென்று காட்டாமல் இனியசுவைகள் யாவையும் ஒன்ருய்த்திரட்டிக் காதிலூட்டினுற்போல இனியசொல்லால் அவர்களுக்கு உபதேசஞ்செய்கின்றார். எவ்வாறெனில்:

"ஊட்டரக்(கு) உண்ட பதுமம்விண்(டு)
  உவப்ப
  ஒளிச்சுடர் உதித்தது போன்றே
தீட்டரக்(கு) உடலின் நாதன்நாம்
  உவப்பச்
  சிறுவனுய்ப் பிறந்ததும் கேட்டேன்
மீட்டரக்(கு) ஒளிபோய் வருடம்ஈர்
  அறுமுன்
  வெயிலென இரவுமாய்க் கீதம்
கேட்டாற்(று) இடையர் அரியதோர்
  காட்சி
  கிளரொளி கண்டதும் கேட்டேன்"

ஊட்டிய சிவப்பு (அரக்கு) நிறத்தை உண்டதுபோலச் செந்தாமரை மலர்ந்து (விண்டு) மகிழும்படிக்குச் சூரியன்உதித்ததன்மைபோலச் சிவப்பால்எழுதப்பட்ட (தீட்டு) உடலைப் போர்த்த இரட்சகனே நாம் மகிழும் பொருட்டாகக் குழந்தையாய்ப் பிறந்தானென்று கேட்டேன். மீளவும் (மீட்டு) பன்னிரு வருடங்களின் முன்னே ஒருநாட் செஞ்சுடர் அஸ்தமித்துப்போனபின்பு (அரக்கொளி போய்) இராக்காலமும் மிக்கஒளியாயிருப்பச் சங்கீதங்களைக்கேட்ட இடையர் ஆற்றிக்கொண்டு அரியகாட்சியின் ஒளியைக்கண்டாரென்று கேட்டேன்" என்கிறார். மீண்டும்........

"வான்தந்த நன்னர் வானமே காட்ட
  வழுக்கில நாவென நவமீன்
தான்தந்த நிலைமூ வரசர்கண் டெழுந்து
  தரணிகாப் பவனைவந் திறைஞ்ச
மீன்தந்த வழிவந்(து) எவண்எவண்
  என்ன
  விளங்கிய பெத்திலந் தன்னில்
ஊன்தந்த உருவோ(டு) ஈங்குதிப்
  பவனென்(று)
  [illegible]ன்றே என்றான்"

"மேலும், அன்றுதோன்றிய புதிய நட்சத்திரத்தின் அடையாளத்தால் தேவபாலனைத்தரிசித்து வணங்கவந்த மூவரசர்க்கும் அவர் பெத்தலேமிற் பிறந்திருக்க வேண்டுமென்று நீங்களே சொன்னீரல்லவோ" என்கிறார்.

அதுகேட்ட வேதசாஸ்திரிகள் சொல்வார்கள்: "நீ சொல்வது உண்மையே. அக்காலத்தில் ஆண்டவன் பிறந்தானென நாம்ஐயப்பட்டது உண்மையே. ஆனாலும், மற்றஅரசர் சூழ வணங்க அவர் கீர்த்திப்பிரதாபத்தோடு அரசாளுவார் என்றல்லவோ வேதத்திற்சொல்லப்பட்டிருக்கிறது. அங்ஙனமாக, நாம் ஒன்றையுங் காணுமையால் இரட்சகர்பிறந்திருப்பார் எனறுசொல்வது எங்ஙனம் பொருத்தமாகும்" என்கிறார்கள்.

தேவகுமாரன் அவர்களின் அறியாமைக்கிரங்கிச் சொல்லுவார்:

"வேறுபட் டெதிர்த்த மாற்றமொன்ருக
  வெளிற்றிளஞ் சொல்ஒரு வீரேல்
ஈறுபட் டனைத்தங் கற்றவர் சொன்ன
  தியம்புது மெனத்தொழு
  துரைப்பான்
மாறுபட் டழிந்த மனுக்குலத் தறனூல்
  வகுத்தளித் தற்றபின் னுலகம்
நீறுபட் டிடுநாட் பயன்றர வருவான்
  நிமலன் என்றது மறையன்றே"

"இரட்சகராகிய தேவகுமாரன் ஆளவும், படவும் வருவாரென்று வேதத்திலே சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது, அவர் முதற்கண் ஈனமனிதனாக அவதாரஞ்செய்து பாடுபட்டு உலகத்தை ஈடேற்றுவாரென்றும், பின்னர் உலகஅழிவுகாலத்தில் மகிமைப்பிரதாபத்துடன் நடுத்தீர்க்க வருவாரென்றும் அர்த்தம்பயக்குமாறு எழுதப்பட்டிருக்கிறது" என்கிறார்.

இங்ஙனமாக இரட்சகர் பிறந்தாரென்றதற்கு அறிகுறியான பலவிஷயங்களை நீங்கள் அறிந்திருந்தும் அவற்றை அறியாதார்போல "இரட்சகர் இன்னும்பிறக்கவில்லையென வாதாடுவது பொருத்தமாகாது" என அவர்களுக்கு அறிவுரைகூறி நிற்கின்றார்.

அதுகேட்ட வேதபாரகர் ஆச்சரியவசத்தாராகித் தேவகுமாரனின் அறிவுவளத்தை மெச்சியவராய்: "உன் தகப்பன் யார்? நீபிறந்த ஊர்எது? உன்குலம் யாது?" என வினவிநிற்கின்றனர். தேவமைந்தனும் அதற்கு விடையாக........

"தாதை உண்டெனிற் தாயிலை அவனும்
  தாயுளது எனில்இலை உதித்த
காதையும் தெளிப்ப எனக்கொர்
  ஊரில்லை
  கலந்திரு குலத்துதித் தில்லை[முன்
கோதை உண்டழிந்த குலம்எனக் கென்
  கூவிடத் தினனவரிலை என்று
ஓதையுண் டெவரும் வியப்புறி நக்காநகு
  உணர்ந்தவை ஓர்ந்துபோயினரே"

எனக்குத் தகப்பன் உண்டானுற் தாயில்லை. தாயுண்டானுற் தகப்பனில்லை. நான்உதித்த தன்மையைப் பார்த்தால் எனக்கு ஊரில்லை. என் குலமோ இருகுலமும்கலந்த ஓர்உயர் குலமாகும் என்கிறார்.

அவ்வாருக அவர் மறைத்துக்கூறியதின் உட்பொருளை அறியாதவராய்ச் சாஸ்திரிகள் வெட்கத்தோடு போதகமண்டபத்தைவிட்டு வெளியேறுகிறார்கள்.

---

● சமீபத்தில் மத்தியதரைக் கடலிலே தண்ணீரின்கீழ் சென்றுகொண்டிருந்த அமெரிக்க சப்மறின்ஒன்றில் அமெரிக்க கடற்படை விசாரணைக்குரவர்களில் ஒருவரான வண. பெறெறி சுவாமியார் திவ்வியபூசை நிறைவேற்றலாயினர். கடலின்கீழே சப்மறின்ஒன்றில் திவ்வியபூசை நிறைவேறியது இதுவே முதன்முறையாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருக்கல்லறைக் கோவில்

ஜெருசலேம்நகரிலுள்ள திருக் கல்லறைக்கோவிலைப் பழுது பார்த்துப் புதுப்பிக்கவேண்டியது அவசியந்தானென்பதைச் சர்வதேச நிபுணர்கள் நால்வர் பரிசோதனைசெய்து வருவதாலே அக்கோவில் சிறிதுகாலம்வரை மூடப்பட்டிருக்கிறது. இந்நிபுணர்கள் ஜோர்தான் அரசாங்கத்தாலும், அக்கோவிற் கட்டடத்தைப் பரிபாலனஞ்செய்துவருகின்ற திருச்சபைஅதிகாரிகளாலும் அழைக்கப்பட்டார்கள். இத்தக்கோவில் ஜெருசலேம்நகரின் ஜவ்வாப் பெரியவாயிலுக் கணித்தாய் நமதுதிவ்வியகர்த்தரின் திருக்கல்லறைக்குமேலாக நிறுவிநிற்கின்றது. அந்த இடத்திலே கி. பி. 326-ம் ஆண்டு கொன்ஸ்ரன்ரின் சக்கிரவர்த்தியால் ஓர்மகாலயம் அமைக்கப்பட்டிருந்தது. ஆனல், அது பின்தப் பூகம்பத்தால் அழிந்து போயிவிட்டது. அது சிலுவைப் படைவீரரால் திரும்பவும் கட்டியெழுப்பப்பட்டபின் அதற்காகக் கிறீஸ்தவர்களும், யூதர்களும்,முஸ்லீம்களும் நூற்றுக்கணக்காகப் போராடிவந்தபோதிலும் 1808-ம்ஆண்டு அதுதீயினல் அழிக்கப்படுகிறவரையில் சேமமாய் இருந்துவரலாயிற்று. பின்னர் அது திரும்பவும் கட்டப்பட்டது.

## போலாந்த வேதகலாபனை

வார்சோநகர் அதிமேற்றிராணியாரான கருதினல்விசின்ஸ்கி ஆண்டவரைத்தவிர, போலாந்திலே கம்யூனிஸ்தஅரசாங்கத்தால் 15 மேற்றிராணிமாரும், 5அப்போஸ்தலிக்க பரிபாலனர்களும், 1,000 குருமாரும் சிறைவைக்கப் பட்டிருக்கின்றனரென்றும், 100 குருமார் காணமற்போயிருக்கின்றனரென்றும் போலாந்த வேதகலாபனையை எதிர்த்துஆட்சேபிக்கும் ஐக்கிய போலிஷ்சங்கம் செய்தி வெளியிட்டிருக்கின்றது. போலாந்தின் கம்யூனிஸ்தஅரசாங்கம் இவ்வாறு வேதகலாபனை நடத்துவதின் நோக்கம், போலிஷ்மக்களின் சமயவாழ்க்கையைப் படிப்படியாக நிர்மூலமாக்குவதும், பரிசுத்தஸ்தானத்துடன் தொடர்பில்லாத "திருச்சபை"ஒன்றை ஏற்படுத்தி அதனைத் தானே ஆட்சிசெய்துவரத் திட்டமிட்டிருப்பதுமேயென்று அச்சங்கம் தெரிவிக்கின்றது. போலாந்தில இருந்துவந்த சந்நியாசசபைகள் அழிக்கப்பெற்று அவற்றில் சேர்ந்திருந்தவர்கள் காவல் முகாங்களுக்கும், ருஷியாவுக்கும் அனுப்பப்பட் டிருக்கிறார்கள். அங்குள்ள ருஷிய பிரிவினைச்சபை முற்றாக அரசாங்கத்தின் ஆதிக்கத்தில் கொண்டுவரப் பட்டுவிட்டது. சகலபிரிவினைச் சபைக்கிறீஸ்தவர்களையும் அவர்களின் ஞானஆட்சியிலிருந்துபிரித்து அவர்களுக்கென்று மஸ்கோவில் ஓர்வகைப் போலிவத்திக்கானை அமைப்பதே ருஷியாவின் நோக்கமென்று சொல்லப்படுகிறது.

# கத்தோலிக்க



# சமாச்சாரம்

## ஜப்பானும் கம்யூனிஸமும்

ஜப்பானிலே யொக்கோஹாமாநகரின் முன்னள்மேற்றிராணியாரான மகாவந். வாகிடா ஆண்டவர் சான் பிரான்சிஸ் கோநகரிலே "யப்பானில் கம்யூனிஸ்தர் அடிகோலிக் கண்டு கொண்ட நயங்க"ளைப் பற்றிப் பேசியபோது: "நம்பிக்கை வைக்கப்பட்ட ஜப்பானியஅரசாங்க அதிகாரிகள்மத்தியில் காணப்படுகின்ற கைலஞ்சம் வாங்குதலாகிய இழிவானநடத்தையே அங்குகம்யூனிஸம் தலையெடுப்பதற்கு வழிதிறந்துவிடலாயிற்று"எனக் கூறலாயினர். "தென்கோறியா எப்போதாவது கம்யூனிஸ்தர்களின் கைப்படநேருமானல் உலகிலுள்ள எந்த வல்லரசும் ஜப்பானின் வீழ்ச்சியைத் தடைப்படுத்திக் கொள்ள முடியாது" எனவும் அவர்கூறிநின்றார். இவைப்பாறிய ஓர் மேற்றிராணியாரான வாகிடா ஆண்டவர் தென்னமெரிக்காவில்போய்க் குடியேறுகின்ற ஜப்பானியர்களின் பிரச்சினைகள்பற்றி ஆலோசனைகூறுவதற்காக அங்குசெல்லும்வழியில் சான்பிரான்சிஸ்கோநகர் கண்டுசெல்லலாயினர். யுத்தம் முடிந்தபின் ஜப்பானிய கத்தோலிக்க சனத்தொகை இரட்டித்தபோதிலும் அங்கு 150 சுதேச குருமார் மாத்திரம் இருப்பதாக அவர் தெரிவித்திருக்கின்றார்.

## சைபீரியாவிலிருந்து திரும்பினர்

ருஷியாவிலே மஸ்கோநகரலெனின் கிறுட் ஸ்றேஷனிலிருந்து சமீபத்தில்ஓர்நாள் பின்லாந்துக்குப்புறப்பட்ட றெயின் வண்டிஒன்றில் ஓர்பிரான்சிய குருவானவர் — சோவியற் தொழில் முகாங்களில் எட்டு வருடகால சிறைவாசஞ்செய்த வண. நிக்கலாஸ்எனும் பிரான்சியகுருவானவர் சுயாதீனமடைந்து பிரான்சுக்குப் பிரயாணமாயினர். 1945-ம ஆண்டு ஜேர்மனியரிடமிருந்து உக்றேயினிலுள்ள ஒடெசா நகரை ருஷியசேனைகள் கைப்பற்றியபோது இவர் அந்நகரிலுள்ள கத்தோலிக்ககோவிலின் விசாரணைக்குரவராய் இருந்தார். அந்நகரிலிருந்து வெளியேறிய ஜேர்மன்படைகளுடன் இவரும் செல்லக்கூடியதாய் இருந்தபோதிலும் தமது விசாரணைப் பங்கைச்சேர்ந்த கிறீஸ்தவர்களைவிட்டுப்பிரிய மனமற்றவராய் அங்குதானே தங்கிவிடலாயினர். பிந்தஇவர் வேவுபார்த்தார் என்ற குற்றச்சாட்டின் பேரிலே கைதுசெய்து மஸ்கோவுக்குக் கொண்டுபோகப்பட்டுச் சிறைத்தண்டனை விதிக்கப்பெற்ருர். மத்தியஆசியாவில் ஒரு வருடகாலம் சிறையிருந்தபின் இவர் சைபீரியமுகாங்களுக்கு அனுப்பிவைக்கப் பட்டார். இவர் ஒருவருடத்திற்குமுன் விடுதலைசெய்யப்பட்ட போதிலும் ருஷியாவிலிருந்து இப்போதே வெளியேறக்கூடியவரானர்.

## கிழக்குஜேர்மனியில் நடப்பது

இங்கிலாந்திலே லீட்ஸ்நகரின் பிரபல மேற்றிராணியாரான மகாவந். ஹீனன் ஆண்டவர் சமீபத்தில் ஜேர்மனிதேச புல்டாநகரில் நிகழ்ந்த அர்ச். பொனிப்பாசியாரின் நூற்ருண்டுவிழாக் கொண்டாட்டத்திற்குச் சமூகமளித்திருந்தபோது, சோவியற்ருஷியாவின் ஆதிக்கத்திலுள்ள கிழக்குஜேர்மனியைச் சேர்ந்தவர்களாய் அதற்குவந்துகூடியகத்தோலிக்கரை அங்குசந்தித்துப் பேசலாயினர். அவர்களைப்பற்றி அவர் குறிப்பிட்டபோது தெரிவித்திருப்பது வருமாறு: "அவர்கள் மூப்பினல் உடல்மெலிந்து, கேவலமாக உடைதரித்திருந்தார்கள்; தாங்கள்அனுபவிக்க வேண்டியிருப்பதை அவர்கள் நம்மிடம் தெரிவித்தார்கள்; சோவியற் ஆதிக்கத்திலுள்ள பகுதியில் தாங்கள் சுதந்திரமாகக் கடவுளைவழிபட முடியாதிருப்பதாக அவர்கள் கூறினர்கள்; அங்கே கடவுளைஎதிர்த்துச் சதியாலோசனை இருந்துவருவதாக அவர்கள் சொன்னர்கள்" என்றுகூறி, "இங்குநாம்அனுபவித்துவரும் சுதந்திரத்திற்காக நாம் கடவுளுக்கு நன்றிசெலுத்துவோமாக" எனக் கூறிமுடித்தார்.

## யப்பானிய சமாதான ஆலயம்

யப்பானிலே அணுக்குண்டு வீசப்பட்ட நகரங்களில் ஒன்ருகிய ஹிரோஷிமாவிலே கட்டப்பெற்றுள்ள சமாதான ஆலயமானது அங்கு அணுக்குண்டு விழுந்த ஒன்பதாவதுவருட நிறைவுதினமாகிய வருகிற ஆவணிமாதம் 6-ந் திகதி அபிஷேகஞ்செய்யப்படவிருக்கிறது. இந்தஆலயத்தைக் கட்டியெழுப்புதற்கென உலகின் அநேக பகுதிகளிலே கத்தோலிக்கரும், மறுசமயத்தவர்களும் பணம் உபகரித்திருக்கின்ருர்கள். யப்பானிலே பாப்பரசரின்ஸ்தானீகராக இருந்துவருகின்ற பேர்ஸ்ரென்போர்க் அதிமேற்றிராணியார் அபிஷேகதிருச்சடங்கை நடத்துவார். யப்பானிய சக்கிரவர்த்தியின்சகோதரரான தகாமற்சூ இளவரசரும் அதற்குச் சமூகமளிப்பார்.

## சிறியபுஷ்பத்தின் மகாலய அபிஷேகம்

நான்கு தினங்களாகப் பெருமிதமாய்நடந்தேறிய திருவிழாக்களைத்தொடர்ந்து இம்மாதம் 11-ந் திகதியன்று லிசியேபட்டினத்தில் நவமாகக் கட்டியெழுப்பப்பெற்ற அர்ச். தெரேசம்மாளின் அழகுவாய்ந்தமகாலயம் அபிஷேகஞ்செய்யப் படலாயிற்று. அப்போது பிரான்ஸ் தேசம்முழுவதிலும், மற்றும் 37 நாடுகளிலுமிருந்து சென்று கூடிய யாத்திரிகர்களால் அச் சிறுபட்டினம் தேங்கியிருந்தது. அத்திருவைபவத்திற்குப் பாப்பரசரின்பிரதிநிதியாகப் பரீஸ் நகர் அதிமேற்றிராணியாரான கருதினல் பெல்தின் ஆண்டவர் தலைமைவகித்தார். அவரைத் தவிர மற்றும்அநேகநாடுகளிலிருந்து நான்கு கருதினல்மாரும், 60 மேற்றிராணிமார், அதிமேற்றிராணிமாரும், ஒருலட்சத்துக்குமேற்பட்ட யாத்திரிகர்களும் சமூகமளித்திருந்தார்கள்.

மகாலய பெரியபலிபீடம் அர்ச். தெரேசம்மாளின் குடும்ப நாமத்தைத்தாங்கிய றுவோன் நகர் அதிமேற்றிராணியாரான மாட்டீன் ஆண்டவரால் அபிஷேகஞ்செய்யப்பட்டது. பெரிய பலிபீடம் அபிஷேகஞ்செய்யப் பெற்றபோது, பதினறு பக்கப் பலிபீடங்களும் தரிசகர்களான மேற்றிராணிமார்களாலே ஒவ்வோர்நாட்டின்பேரால் அல்லது சிலகூட்டுநாடுகளின் பேரால் அர்ப்பணஞ்செய்து அபிஷேகம் பண்ணப்படலாயின. ஒவ்வோர் பலிபீடமும் அர்ச். தெரேசம்மாளுடையவும், அந்தந்நாட்டில் விசேஷவிதமாகப் பக்திசெய்யப்படுகின்ற அர்ச்சியசிஷ்டர்களுடையவும் திருப்பண்டங்களை அடக்கியிருக்கின்றன. இத்தாலியபலிபீடம் அர்ச். பத்தாம் பத்திநாதர்பேரால் அர்ப்பணஞ்செய்யப் பட்டுள்ளது. அர்ச். தெரேசம்மாளுக்கு முத்திப்பேறுபெற்றபட்டம் அருளுதற்கானவிசாரணையை அனுமதித்தவர்இவரே.

திருவைபவத்தின் போது பிரான்சியஅரசினிடமாகவுள்ள பிறநாடுகளின்ஸ்தானீகர்களும், முன்னள்பிரதமர் எம். லானியல்அவர்கள் உட்படப் பிரான்சியபாராளுமன்ற அங்கத்தவர்களும் சமூகமாயிருந்தார்கள். சீனவின்பேரால் அர்ப்பணஞ்செய்யப்பட்ட பலிபீடஅபிஷேகம் நடைபெற்றபோது, சீனவிலிருந்து நாடுகடத்தப்பட்ட ஒரு தொகையானமேற்றிராணிமார் பிரசன்னமாயிருந்தனர். இந்த மகாலயம் 7,000 மக்களை அடக்கக்கூடியது. சாயந்தரம் பரிசுத்தபாப்பரசர் வத்திக்கானிலிருந்து வானெலியிலே பிரான்சியபாஷையில் பத்து நிமிஷம் பேசிச் சகலர்க்கும் தமது ஆசி வழங்கினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆடி மாதம்

போதுக்கருத்து :— அந்நிய நாடுகளிற்போய்க் குடியேறச்செல்லுகிறவர்களின் ஆத்துமபராமரிப்புக்காக வேண்டிக்கொள்ளுவது.

மிஷன்கருத்து :— அங்கோலாவிலும், மொசம்பிக்கிலுமுள்ள திருச்சபைக்காக மன்றாடிக்கொள்ளுவது.


சத்தியவேத
**பாதுகாவலன்**

1954-ம் ஆண்டு
ஆடி மாதம் 29-ந் திகதி


## குருத்துவ வெள்ளியூபிலி

கொழும்பிலே நுகேகொடையிலுள்ள அமலோற்பவ மரியநாயகிசபைக் குருத்துவமடத்து வேதசாஸ்திர போதகாசிரியராய் இருந்துவருகிறவரான வண ஜி. ஏ. குருசாமி, டி. டி., டி. சி. எல். சுவாமியவர்கள், 1929-ம் ஆண்டு ஆவணிமாதம் 4-ந் திகதியன்று குருப்பட்டம் பெற்றாராகலின் அவரது குருத்துவ இருபத்தைந்தாம் வருட வெள்ளியூபிலிவிழா அடுத்துவரும் ஆவணிமாதம் 4-ந் திகதி புதன்கிழமை வருகிறதென்னும் சுபசெய்தியை மகிழ்வுடன் தெரிவிக்கின்றோம். யூபிலி நாயகரான சுவாமியவர்கள் பத்தாவத்தைப்பதியிலே புராதனப் பெருமைவாய்ந்த உயர்குடும்பம் ஒன்றில் உதித்தவர். உலகில் புகழாய்ப் பெருமையாய் வாழக்கூடிய தகைமைபெற்றிருந்தவர். ஆயினும் அவைகளையெல்லாம் விழலெனஉணர்ந்து அறவே துறந்தார். தொண்டுகளிலெல்லாம் சீரியதொண்டாகிய தேவதொண்டுக்கு — ஆன்ம இரட்சணியதொண்டுக்கு — குருத்துவ தொண்டுக்குத் தம்மை அர்ப்பணஞ்செய்தார். குருமடத்தில் பிரவேசித்தார். அவரில்காணப் பெற்றசிறந்ததேவபக்தியையும், மிகுந்த புத்திசாதுரியத்தையும், வித்தியாதிறமையையும் கவனித்த சிரேஷ்டர்கள் உயர்தரசாஸ்திரங்கள் கற்றுவருமாறு அவரை ரோமாபுரிக்கு அனுப்பி வைத்தார்கள். சுவாமிகளும் அங்கு சென்று குருத்துவத்துக்குரிய வேதசாஸ்திரங்களைக்கற்று 1929-ம் ஆண்டு ஆவணிமாதம் 4-ந் திகதியன்று அங்கு ரெவியானோவிலுள்ள அமலோற்பவ மரியநாயகிசபைக் குருமடத்துச் சிற்றாலயத்திலே குருத்துவாபிஷேகஞ் செய்யப்பெற்றார். பின்னர் தமதுவேதசாஸ்திர, திருச்சபைச் சட்டசாஸ்திர படிப்பைத் தொடர்ந்து படித்து இரண்டிலும் டி. டி., டி. சி. எல். எனும் பண்டிதபட்டங்கள் பெற்றுக்கொண்டு இலங்கைக்குத் திரும்பியதும், ஒருவருடகாலம் கொழும்பிலுள்ள சென் பேர்ணட் குருத்துவமடத்தில் பேராசிரியராகக் கடமையாற்றிவந்தார். அதன்மேல் அவர் மன்னார், அர்ச். சவேரியார்கல்லூரி அதிபராய், மன்னார்க்கட்டளைக் குரவராய், மன்னார் - மாதோட்டப்பகுதி மூப்புச்சுவாமியாராய், நாவாந்துறை, பருத்தித்துறை விசாரணைப்பங்குகளின் கட்டளைக்குரவராய், மேற்றிராசன உதவிப் புரோக்கியூறேற்றராய், மேற்றிராசன பாடசாலைகளின் பிரதமமுகாமைக்காரராய், மூப்புச்சுவாமியாராய்ப் பல்வேறு காத்திரமிக்க பதவிகள்வகித்தபின், 1950-ம் ஆண்டு நுகேகொடையில் இருந்துவரும் குருத்துவ மடத்தின் வேதசாஸ்திர போதகாசிரியராய் நியமனம்பெற்று இன்றுவரை குருத்துவமாணவரைப் பயிற்றுவதிலே அல்லும் பகலும் அயராதுழைத்துவருகின்றார். சென்றகால்நூற்றாண்டு காலத்திலும் சுவாமியவர்கள் எங்கெங்குதொண்டாற்றினரோ அங்கங்கெல்லாம், என்னென்ன பதவிகள் வகித்திருந்தாரோ அவற்றிலெல்லாம் தமது சாந்தமான பதவியபோக்காலும், கனிவான மதுர வாக்காலும், ஏழைகள்மாட்டுக் காண்பித்துவந்த அனுதாப சிந்தையாலும், ஞானார்த்தங்கள் பொலிந்த தேனமிர்தமான பிரசங்கத்தாலும், எவருமே மனநோக இடம் வையாது நடந்துகொள்ளும் புனித பாதிரிகையாலும், ஓர் உத்தம வேதசாஸ்திர பண்டித ஆசிரியர்க்குரிய சிறந்த இலட்சண, லட்சியங்களெல்லாம் ஒருங்கே அமையப்பெற்றுள்ள பெருந்தகையாலும் தமதுசகோதர குருப்பிரசாதிகள், மற்றும் ஆசிரியர்கள், குருத்துவமாணவர்கள், பெரியோர் சிறியோராகிய எல்லவராலுமே வெகுவாக நேசிக்கவும், நன்குமதிக்கவும் பெற்று அன்னாருக்கெல்லாம் அன்பராய், அரியகுரவர்திலகமாய் விளங்கிவந்திருக்கின்றாரெனில் மிகையாகாது. சுவாமிகளின் குருத்துவ வாழ்க்கையிலே இருபத்தைந்து ஆண்டுகள்....ஆ! என்னபாக்கியமான — என்ன பலிதமான — என்ன பெரும் பரோபகாரமான – தேவதோத்திரவாஞ்சை நிறைந்ததொண்டு! ஆத்தும இரட்சணிய தியாக தொண்டு!! ஆம், யூபிலிநாயகம் அவர்கள்குருசாமியென்ற தமது அழகிய நாமத்துக்கிணங்க ஓர் குருநாயகமாக விளங்கிவந்திருக்கிறாரெனிலும் மிகையாகாது. சுவாமிகளுக்கு நாமும் இந்த வேளை யூபிலிச்சோபனங் கூறுகின்றோம். எம்பெருமான் அவர் மீது இனிமேலும் அதிகந்தெரியலான திருவருட்பிரசாதங்களைப் பொழிந்து அவருடைய திருத்தொண்டுகளை மேன்மேலும் ஆசீர்வதிர்தருளுமாறு அவர் திருவடிகளை வேண்டுகின்றோம்.

---

● சிகறெற்புகைப்பதாலே சுவாசப்பையில் புற்றுநோய் (கான்சர்) ஏற்படுவதாக அமெரிக்கபுற்றுநோய் ஆராய்ச்சிச்சங்கம் அறிக்கையிட்டபின் அமெரிக்கர்பலரும் பழையபடி சுங்கானைப் பாவிக்கத் தொடங்கியிருக்கின்றார்கள். அந்தஅறிக்கை வெளியாகுமுன் விலைப்பட்ட சுங்கான்களைக் காட்டிலும் தற்போது மும்மடங்கான சுங்கான்கள் அங்கு விலைப்படுகின்றனவாம்.

● அயர்லாந்துதேச டபிளின் நகரில் ஓர்காலம் பெரிய குடிகாரனாயிருந்து மனந்திரும்பிப் பரிசுத்தசீவியம் நடத்திவந்தமற்தல்போத்துஎனும்தொழிலாளி மரணமடைந்த 29-ம் ஆண்டு ஞாபகதினம் சென்ற ஆனிமாதம் வந்தபோது, அவர்மரித்தஇடத்தைக் குறிக்கும் சேத்திரத்தில் பன்னூற்றுக்கணக்கான மக்கள் முழந்தாட்படியிட்டுச் செபஞ்செய்துநின்றார்கள்.



## சதாசகாயமாதா கோணம்

—:—

### சனிக்கிழமைச் சம்பவம்

ஒருகிராமத்தில் 16 வயதுநிரம்பாத ஓர்இளம்பெண் இருந்தாள். அவள் சீவியததில் ஒருபோதும்நடவாத ஒரு விசேஷசம்பவம ஒரு சனிக்கிழமை நடைபெற்றது. அதாவது: அன்று அவள் கிராமத்தின்கிணற்றடியில் மாடுகளுக்குத் தண்ணீர் வைத்துக்கொண்டிருந்தாள். கிணற்றைச்சுற்றியிருந்த மரங்கள் அவளுக்கும், மாடுகளுக்கும் நல்லநிழலைக்கொடுத்தன. சூரியவெப்பத்தையுங் குறைத்தன. அவள் தண்ணீர்அளளுமவாளியை எட்டிப்பிடிக்க எத்தனித்தபோது யாரோ அவளைக் கூப்பிடும்சத்தமொன்று கேட்டது. திடுக்கிட்டுத் திரும்பிப்பார்த்தாள். புன்னகைபூத்த வதனத்துடன் ஒரு அலங்காரமான பெண்மணி தன்னண்டை அவளைவரும்படி கைகாட்டுவதைக் கண்டாள். அவளும் என்ன செய்வதெனத்தோன்றாத அவளுடைய பாதத்தண்டை முகங்குப்புற விழுந்தாள். அப்போது தான் பெரியசந்தோஷம் அனுபவிப்பதாக உணர்ந்தாள். கண்களை மேல்நோக்கிப் பார்த்தபோது பின்வரும் சொற்கள் அவள்காதிற்பட்டன:

“எனதுநந்தாவனத்தில் நீயும் என்னோடு எப்போதும் சந்தோஷமாயிருக்க வேண்டுமென விரும்புகிறேன்; நீ ஒரு குருவானவரைக் கூப்பிடு; ஞானஸ்நானம் பெறு; பின்பு நான் வந்து உன்னைக் கூட்டிச்செல்வேன்.”

அந்தஇளம்பெண் தனதுகரங்களால் அப்பெணமணியைக் கட்டிப்பிடிக்க எத்தனிக்கவே அந்தமாது உடனே மாயமாய் மறைந்துவிட்டாள்.

காலந்தாழ்த்தாது அந்தப்பெண் உடனேதானே அவ்வூர் உபதேசியாரிடம்போய் ஒருகுருவானவரை வரவழைக்கும்படி கேட்டாள்.

“நீ வேதக்காரியல்ல, அஞ்ஞானி; அதனால் உனக்காகக் குருவானவர் வரமாட்டார்”என்றார் உபதேசியார்.

“தயவுசெய்து ஒருகுருவானவரைக் கூப்பிடுங்கள்; நான் ஞானஸ்நானம் பெறவேண்டும்; நான் சாகப்போகிறேன். செத்ததும்......”

“எங்கே போவாய்? எங்கே போவாய்?” என்று உபதேசியார் மிகுந்த பரபரப்புடன் கேட்டார்.

“நான் இப்படிச் செய்யவேண்டும் என்றும், நான் தன்னோடு நித்தியகாலமாக இருக்கவேண்டுமென்றும் ஒரு அலங்காரமாது கூறிச்சென்றா”என்று சொன்னாள்.

அப்பெண்ணின் வேண்டுகோளை மறுக்கமுடியாதவராய் உபதேசியாரும் அதிகம்சமீபமாயிருந்த குருவானவருக்கு ஒருகடிதம் அனுப்பினார். அதில்: “உடனேவாருங்கள்; ஒரு பெண் மரிக்கப்போகிறாள்; ஞானஸ்நானம்பெற விரும்புகிறாள்”என்று எழுதியிருந்தது.

குருவானவர் தமது மாட்டுவண்டியைப் பூட்டும்படி உத்தரவிட்டார். ஒருஆத்துமத்தை இரட்சிக்கவேண்டுமென்ற தாகத்தோடு குறித்தகிராமத்தைநோக்கித் தாமதமில்லாது புறப்பட்டார். கிட்டததட்ட 24 மணித்தியாலங்களின்பின் குறித்தஇடத்தை அடைந்தார். சாகப்போகும் பெண்ணைப்பற்றி விசாரித்தார். தங்களுக்குத்தெரியாதென்று ஒவ்வொருவருமே சொல்லிவிட்டார்கள். கடைசியாக ஒருஇளைஞன் ஓடிவந்து, கால்மைல் தூரத்துக்கப்பால் வேறுசிறுமிகளோடு அவள் விளையாடிக்கொண டிருக்கிறாளெனத் தெரிவித்தான். குருவானவருக்குக் கோபம்வந்தது நூதனமல்ல. அதனால்அவர் பயமுறுத்தும் தொனியில்: “சருவேசுரனுடைய காரியங்களில் பரிகாசம்பண்ணுகிறாயா? சாகப்போவதாகக்கூறி ஞானஸ்நானம்பெற வேண்டுமெனவிரும்பி எனக்கு ஆள் அனுப்பிவிட்டுத் தோழிகளுடன் கும்மாளம்போட்டு விளையாடிக்கொண்டிருக்கிறாயா; இதுதகுமா” என்று குருவானவர்கூறினார்.

“சுவாமி! தயவுசெய்து என்மேற் கோபியாதிருங்கள்; ஒரு அலங்காரமாது ஒருகுருவானவரை அழைத்து, என்னை ஞானஸ்நானம் பெறும்படியாகவும், அப்போது தன்னுடையநந்தாவனத்துக்கு என்னைக் கூட்டிச்செலவதாகவும் கூறிமறைந்தா” என்று அப்பெண்பிள்ளை கூறியதைக்கேட்ட குருவானவர்:

“என்னமடைத்தனம்! மாதாவாவது, நந்தாவனமாவது!... இப்படி மதியீனமாகப் பேசினால் நீ பெருங்கஷ்டத்துக் குள்ளாகநேரிடும்” என்றார்.

“சுவாமி! நான்மதியீனமாகப் பேசவில்லை; உள்ளதைஉள்ளபடியேசொன்னேன்; எனக்கு ஞானஸ்நானங் கொடுங்கள்; நான் போகவேண்டும்” என்றுசொல்லி அழத்தொடங்கினாள்.

“சரி, நீ ஞானோபதேசத்தைப்படி; அதன்பின் என்னசெய்யவேண்டுமென்பதைப்பற்றித் தீர்மானிப்பேன்”என்று கூறித் தமதுசெபப்புத்தகத்தைத் திறந்தார். திறந்தபோது, ஒற்றைகட்கிடையே இருந்தஒருபடம் வழுகிக் கீழே விழுந்தது. அது அவள்கண்டமாதின் சாயலை ஒத்திருந்தது.

“அந்த மாதுதான்! ஆம், அந்த மாதுதான்” என்று உரத்துக் கூவினாள், அந்தப்பெண்பிள்ளை.

“எந்தமாது?”

“கிணற்றடியில் நான்கண்ட அலங்காரமாது; நான் ஞானஸ்நானம்பெற வேண்டுமென்றும், தன்னோடு நந்தாவனத்துக்கு வரவேண்டுமென்றும் கேட்டமாது” என்றாள்.

குருவானவர் சற்றுத்திகைத்தார். படத்தைத் திரும்பத்திரும்பப் பார்த்தார். மூத்திசெய்தார். “ஓ! மாசில்லாதமாதாவே! லில்லிப்புஷ்பங்களை நேசிக்கிறவளே! உமது நந்தாவனத்தில் நாட்ட இந்தலில்லிப்பூவை உமக்கு நிச்சயமாகக்கொடுப்பேன்; இவளுக்கு ஞானஸ்நானம்கொடுப்பேன்” என்று சொன்னார்.

அவளும் காலதாமதமில்லாது ஒரு கிழமைக்குள் ஞானோபதேசம்படித்து ஞானஸ்நானம்பெற்றாள். திவ்விய நன்மையும் பெற்றாள். அதுவும் ஓர் சனிக்கிழமை.

அதன்மேல் அன்று பின்னேரம் போலத் தனக்குநல்லசுகமில்லையெனக் கண்டாள். “நான் போகும்நேரமாக்கும்” என்று நினைத்தாள். படுக்கையிற்படுத்தாள். அலங்காரமாதாம் தேவதாயார் மறுதரிசனங் கொடுத்தா. தன்னிடம் வரும்படி சைகைகாட்டினா. மாடப்புறாப்போல அவளுடையஆத்துமம் பறந்துசென்றது. நந்தனவனமாம் மோட்சத்தில் தேவதாயாரோடு என்றும் நித்தியபாக்கியத்தை அனுபவிக்கின்றது. அவள்மரித்தது சனிக்கிழமையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தக மதிப்புரைகள்

## சீரழிந்த சீனம்

மூலம்: Br. வடக்கன்
தமிழாக்கம்: J. தஸ்நேவிஸ் பர்னாந்து, B. A.
பிரசுரம்: அஸிஸி அச்சகம், நாகர் கோவில்.
விலை: 3 அணா.

பேராசிரியர் முண்டசேரி அவர்கள் செஞ்சீனாபற்றி எழுதிய கட்டுரைகளுக்கு Br. வடக்கன்என்பார் மலையாள பாஷையில் எழுதியமறுப்பைத் தமிழ் மக்களும் படித்துணருமாறு ஆசிரியர் இந்தநூலில் தமிழாக்கம் செய்திருக்கிறார்.

சீனாவின் இன்றைய உணவுநிலையையும், ஆங்கு நடைபெறும் போலிஜனநாயகத்தையும், நீதிப்பரிபாலனத்தின் சீர்கேடுகளையும், மற்றும் அட்டூழியங்களையும் பலசான்றுகளோடு எடுத்துக் காட்டிச் சீனாவின் இன்றைய சீரழிந்த நிலையை இதுவிளக்கிநிற்கின்றது.

உலோகாயதக் கொள்கைகளால் அலைப்புண்டு தமதுமனச்சாட்சியையும் உணர்ச்சியற்றதாக்கிய போலிஅறிஞர்கள் பொய்ப்பிரசாரங்களால் பாமரமக்களைத் தங்கள் மாயவலையில் அகப்படுத்த முயற்சிப்பது கவலைக்குரியதாகும். இதனால் நாட்டிற்குவிளையும் தீங்குகள் அளவற்றனவாகும். இத்தகைய நச்சுப்பிரசாரங்களை உடனுக்குடனே களையவேண்டியது உண்மை அறிஞர்களின் கடன். இதுவே தலைசிறந்த சமூகத்தொண்டாகும்.

போற்றத்தக்க இத்தொண்டிற்காகத் தமிழாக்கஆசிரியர் பலநூல்களை எழுதியிருக்கிறார். இந்நூலும் மொழிபெயர்ப்பென்று தோற்றாவகையிலே அமைந்திருக்கின்றது. அத்தகைய வளமான தமிழ்நடை. எனவே, இந்நூலைத் தமிழுலகம் உவந்தேற்குமென்பதற்கையமின்று.

நமக்கு அனுப்பியபிரதிக்காக நன்றி கூறுகின்றோம்.

## அர்ச். வின்சென்ட் தே பவுல்

ஆக்கியோன்: R. P. குழந்தைசாமி
பிரசுரம்: அஸிஸி அச்சகம், நாகர் கோவில்.
விலை: 14 அணா.

* நம்அச்சியந்திரசாலையில் விற்பனைக்கிருக்கின்றது. பிரதி விலை: 1-10

நல்வாசகக் களஞ்சியத்தின் ஐந்தாவதுபிரசுரமாக இந்நூல்வெளிவருவது நிரம்பவும் பொருத்தமானதாகும். ஏனெனில், எமது திவ்விய வேதத்தின் பிரதமகற்பனைகளுள் இரண்டாவதாகிய பிறர்சிநேகக்கட்டளையை விசுவாசிகள் அனுசரிப்பதற்கு அர்ச்.வின்சென்ட்தெ பவுலின் தூயவாழ்க்கை ஒருமாதிரிகையாக அமையுமன்றோ! அதுவும் உலகமே சதமென்றும், சுயநலமே வாழ்வென்றும்,மதிமயங்கித்தடுமாறி நிற்கும் இன்றையஉலகில் வாழ்பவராகிய எம்மனோர்க்கு இப்புனிதரின் புண்ணிய மாதிரிகை ஒருகலங்கரை விளக்கமாக அமையுமன்றோ!

இறைவன் ஆட்டிடையனாகிய வின்சென்ட்டை ஆத்தும மேய்ப்பனாக்கி, ஆறுதலற்ற அநாதைகளுக்கு இகபர நன்மைகளை உதவும் ஊழியனாக்கத் திருவுளம்கொண்டவகையும், அதற்கிணங்க அவரும் "ஆண்டவரே! நான் இனித்தரித்திருக்கு ஊழியஞ்செய்வதில் என்சீவியம்முழுவதும் செலவழிப்பேன்" என்றுபிரதிக்கினை செய்துகொண்டதிறமும், அதைச்சரிவர நிறைவேற்றுவதற்காக அவர் தமதுவாழ்க்கையிற்பட்ட துன்பதுரிதங்களும், பிறவும் இதன்கண் அழகாகவும், அருட்சிக்குரிய விதமாகவும் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.

இன்னும், இவரால் அடியிடப்பட்ட தருமசகோதரிகள் சபையின் விபரமான விருத்தாந்தங்களும், இவர் இறந்தபின்னர் இவரின்பெயரால் நிறுவப்பட்டு இன்று உலகமெங்கணும் பரவியுள்ள "அர்ச். வின்சென்ட் தெ பவுல்" என்ற புண்ணிய சபையின் புனிதவரலாறும் இதிலே விளக்கப்பட்டுள்ளன.

எனவே, இந்நூலானது சோர்ந்தநிலையிலிருக்கும் எமதுவிசுவாசத்தைத் தட்டிஎழுப்பித் தேவசிநேகத்தை வளர்க்குமென்பதில் சந்தேகமில்லை. இத்தகைய உயரியநூலை ஆக்கித்தந்த ஆசிரியருக்கும், அதனை இத்துணை அழகாகவும் மலிவாகவும் பதிப்பித்த அச்சகத்தாருக்கும் கத்தோலிக்க உலகம் என்றும் கடமைப்பட்டதாகும்.

ஆசிரியர் மேலும் இப்பணியிலீடுபட்டு நல்வாசகக் களஞ்சியத்தைப் பூர்த்தியாக்க இறைவன் அருள்பாலிப்பாராக!

நமக்கு அனுப்பியபிரதிக்காக நன்றி கூறுகிறோம்.

## ஆசிரியர்களுக்கு அறிவித்தல்

### விடுமுறைக் கழகம்

தத்தம் பாடசாலைகளின் வட்டார வித்தியாதரிசிகளால் நடத்தப்படும் விடுமுறைக்கழகங்களில் ஆசிரியர் எல்லோரும் பங்குபற்றவேண்டுமெனக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

* * *

### மன்னார்ப் பகுதித் தலைமை ஆசிரியர்களுக்கு

மன்னார்ப்பகுதி வித்தியாதரிசியவர்களால் நடத்தப்படவிருக்கும சங்கீத விழாவில் உங்கள்பாடசாலையும் பங்குபற்றவேண்டுமெனக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

T. A. J. Mathuranayagam,
Gen. Manager, R. C. Schools.
Jaffna 27-7-54.

## ஆவே மறியா

இத் தலையங்கம் பூண்ட நிகழ்ச்சிஒன்று வருகிறஆவணி மாதம் 15-ந்திகதி காலை 9 மணிக்கு இலங்கை வானொலியில் ஒலிபரப்பப்படும். மரியாயின் புனிதவருடத்தில் மாதாவின் குணசம்பத்துக்களைப் பற்றித் தியானித்தல் பொருத்தமும், பிரயோசன முடையதுமாகும். சென்ற மார்கழிமாதம் 13-ந் திகதி "மெசியாவின் வருகை" என்ற அழகியவானொலிநிகழ்ச்சியை நடத்திய வங்காலை அர்ச். செசீலியா சங்கீதகுழுவினரே இதனையும்ஒலிபரப்புவர். புனிதமான கத்தோலிக்க இன்பக் கலைகளின் மத்தியாகவிளங்கும் நமதன்னையின்மீது திருச்சபையானது புனைந்திருக்கும் அழகிய பாமாலைகளின் நறுமணம் நுகர விரும்பும் பக்தர்களான ரசிகர்கள் இத்தருணத்தைத் தவறவிட மாட்டார்கள்என எண்ணுகிறோம். இந்நிகழ்ச்சியைச் சாதாரண இன்பப்பொழுது போக்காகக் கருதாது மரியாயின் ஆரோபணத்திருநாளின்போது நாம்செய்யும் தியானமுயற்சியில் ஒன்றாகக் கொள்ளவேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளுகிறோம்.

S. Gomez, O. M. I.
P. P. Vankalai.
26-7-54.

Rev. Fr. E. Dessy request the prayers of the readers for the soul of his brother priest Don Eldred Dessy, O. S. B., who died recently in Belgium.

சமீபத்திலே பெல்ஜியத்தில் காலஞ்சென்ற தமது அருமைச்சகோதரரும், அர்ச். ஆசீர்வாதப்பர்சபைக் குருவருமான வண. டொன் எல்ட்றெட் டெஸி சுவாமியவர்களின் ஆன்மஇளைப்பாற்றிக்காக மன்றாடிக்கொள்ளுமாறு வாசகர்களையெல்லாம் வண. எல் டெஸி சுவாமியவர்கள் பரிவாகக் கேட்டுக் கொள்ளுகின்றார்.

## அறிவித்தல்

### பாடசாலைமாணவரின் மடுத்திருயாத்திரை

அன்பான தலைமைஆசிரியர்களே!

மருதமடுத் திருயாத்திரையில் பங்குபற்றும் பாடசாலைகள் இம் மாதம் 25 ந்திகதிக்குமுன் எமக்குத் தெரிவிக்கவேண்டுமென முன்னர் அறிவித்திருந்தோம். சிலபாடசாலைகள் இன்னும் அறிவியாமல் இருக்கின்றன. யாத்திரைசெய்ப விரும்பும் பாடசாலைகள் ஆவணிமாதம் 3-ந் திகதிக்குமுன் அறிவிக்கவேண்டும். அத்தேதிக்குப்பின் விண்ணப்பிக்கும் பாடசாலைகள் யாத்திரையில் பங்குபற்ற முடியாது என்பதை அறிக.

அக்கிராசனர்.

## சின்னமடுத் திருநாள்

### திருநாள் நிகழ்ச்சி

4-8-54 புதன்கிழமை:
மாலை 7-45மணிக்கு மாலைஆராதனை
5-8 54 வியாழக்கிழமை:
காலை 5மணி தொடக்கம் திவ்வியபூசை
,, 7மணிக்குப் பாடற்பூசை
,, 8 ,, திருச்சுரூப சுற்றுப் பிரகாரம்.

கட்டளைக்குரவர்
சின்னமடு, சரவணை, வேலணை
27-7-54

## சந்தானமாதா சேத்திரம்

### வலித்தூண்டல் (கீரிமலை)

அர்ச். அன்னம்மாள்திருநாள் வருகிறது
ஆவணிமாதம் 1-ந் தேதி

வழமைபோல நவநாள் ஆயத்தம், திருநாட்பாடற்பூசை, விருந்து நடைபெறும். யாத்திரிகர்களுக்கு வேண்டிய வசதிகளெல்லாம் தயாராயிருக்கும்.

கட்டளைக்குரவர்
இளவாலை

## நானா சங்கதிகள்

● களைப்பூண்டுகளையும், பயிர்களைச் சேதப்படுத்தும் பூச்சி புழுக்களையும் அழிக்கும் விஷயமாய்ப் பிரித்தானிய ரசாயனநிபுணர்கள் வருடம்ஒன்றுக்கு லட்சக்கணக்கானபவுண் செலவுசெய்கின்றார்கள். அவர்களுடைய பரிசோதனை வெற்றியளிக்குமானால் அத்தேசமாத்திரம 18 கோடிபவுண் பெறுமதியான உணவுப்பொருட்களை மேலும் உற்பத்திசெய்யமுடியுமாம்.

● பிரித்தானியதேசத்திலே சென்ற புரட்டாசியுடன்முடிவான ஒருவருடகாலத்திலும் 67,610 ஏக்கர்நிலத்தில் 11 கோடியே 80 லட்சம் மரக்கன்றுகள் நாட்டப்பட்டிருக்கின்றன. இந்த மரங்களெல்லாம் வளருமிடத்து அத்தேசம் 26 புதியகாடுகளைக் கொண்டிருக்கும். இதுதவிரத் தனிப்பட்ட ஆட்கள் 18,000 ஏக்கர் கலட்டுநிலத்திலே மரக்கன்றுகள் நாட்டியிருக்கின்றார்கள்.

● அபிசீனியநாட்டின் ஹெயில் செலாசிசக்கரவர்த்தி சமீபத்தில் கனடாதேச மொண்றியல்நகருக்கு விஜயஞ்செய்திருந்தபோது அந்நகர் அதிமேற்றிராணியாரும், மொண்றியல் கத்தோலிக்க சர்வகலாசாலை வேந்தருமான கருதினால் லெஜர்ஆண்டவருக்குக் கீஸ், அறிக்பாஷைகளிலே கையெழுத்தாக எழுதப்பட்ட விலையேறப்பெற்ற புராதன புதியஏற்பாடொன்றை அச்சர்வகலாலைக்கெனச் சந்மானிக்கலாயினர்.

● அமெரிக்கஅரசு பிறநாடுகளுக்கு இராணுவஉதவி அளிப்பதற்கென்று தனதுபுதிய நிதிவருடத்தில் 177கோடியே 83லட்சம்டலர் ஒதுக்கியிருக்கின்றது. இதில் ஐரோப்பியநாடுகளுக்கு 61கோடியே 75லட்சம் டலரும், சமீபகீழ்நாடுகளுக்கு 18கோடியே 12 லட்சம் டலரும், தூரகீழ்நாடுகளுக்கு 58கோடியே 36லட்சம்டலரும், லத்தீன் அமெரிக்க நாடுகளுக்கு 1கோடியே 30லட்சம் டலரும் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

● மான்செஸ்றர்நகரிலே யூதபணப்பெண்கள் கலியாணச்சடங்குக்குவரும்போது, சட்டைக்கைகள் இல்லாது தோளுக்குமேல்நிற்கின்ற உடைகளை அணிந்துவரப்படாதென்று கேட்கப்பட்டிருக்கின்றார்கள். அங்குள்ள யூதகுருமாரும், பாதிரிமாரும்கூடிக் கலியாணத்தின்போது மரியாதையான உடைகளை அணிந்துவருமாறு தத்தம் சமயத்தவர்களைக் கேட்கத் தீர்மானித்திருக்கிறார்கள்.

## அறிவித்தல்

யாழ்ப்பாண முதற்தேவநற்கருணை ஆதாயநிதிச்சங்க வருடாந்த பொதுக்கூட்டம் (1-8-54) வருகிற ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு யாழ்ப்பாணம், சென்சாள்ஸ் பாடசாலைமண்டபத்தில் நடைபெறும் அங்கத்தவர்களும் அபிமானிகளும் சமுகமளிக்கும்படி அன்புடன் வேண்டப்படுகின்றனர்.

ச. மரியாம்பிள்ளை
(கௌரவ காரியதரிசி)
யாழ்ப்பாணம்
23-7-54



## பெரியகட்டு அர்ச். அந்தோனியார் திருநாள்

ஆவணி ஞாயிறு 1-ந் திகதி.

ஆயத்தத் திரிதினங்கள்: ஆடி 29, 30, 31.

பகற்கோச்சிகள் பெரியகட்டுக் கோவிலடியில் ஆடி 29-ந்திகதி தொடக்கம் ஆவணி 2-ந் திகதி மட்டும் நிற்பாட்டப்படும்.

மடுரோட், கட்டளைச் சுவாமியார்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாலர் பக்கம்

## அண்ணு சொல்வது:

அருமைச் சகோதரங்களே!

இயற்கை அழகு மனிதரைக் கவரும். கவிகள் இயற்கை எழிலைக் கண்டு அதில் வசப்பட்டு விடுவார்கள். மேல்நாட்டுக் கவிஞர் என்ன, நம்நாட்டுப் புலவர் என்ன, சிருட்டிகளின் சிறப்பைக் கண்டு சொக்கிப் போகாதார் இல்லை.

லோங்வெலோ (Long-Fellow) என்பவர் ஓர் ஆங்கிலப் புலவர். அவர் சிறுவரைப் பற்றி என்ன எழுதியிருக்கிறார் தெரியுமா? அவர் ஆங்கிலத்தில் எழுதியது என்னவெனில்:

"பிள்ளைகளே, உங்கள் இதயங்களில் பட்சிகளும், சூரியப் பிரகாசமும் உண்டு; உங்கள் சிந்தனைகள் சிற்ருறுகளாய் ஓடுகின்றன; சிறுவர் இலரேல் உலகம் எக்கதி யாகும்?"

இப்புலவர் இயற்கை வளங்களையும், வனப்பையும் சிறுவரின் இருதயத்திலும், மனநிலையிலும் காண்கிறார்.

உங்களைக் காண்கிறவர்கள் எல்லோரும் அந்த வனப்பைக் கண்டு சந்தோஷ மடையச் செய்யுங்கள். சுபம்!

உங்கள் அன்புள்ள, அண்ணு.

## வணங்கிடுவோம்

'ஜெயம்'

1. மாபரன் தாய்மரியாள் — புவிதனில்
மாசின்றி உற்பவித்தாள்
தூமலர்த் தாளிணையே — துதித்துத்
தோத்திரஞ் செய்திடுவோம்

2. பேயின் சிரமிதித்தாள் — அழகில்
பிறங்கு மதிபதத்தாள்
தாயின் திருப்புகழை — அனுதினம்
தாசர்கள் பாடிடுவோம்

3. புண்ணியப் பொன்னுருவாள் — விண்ணவர்
போற்றிடும் தண்ணளியாள்
மண்ணின் தவப்பயனுள் — பதந்தனை
மக்கள் சரணடைவோம

4. பாவியைக் காத்திடவே — மகிழ்வொடு
பக்கத் துணைபுரிவாள்
சீவியந் தந்தவளின் — திருவடி
சேவித்து வாழ்ந்திடுவோம்

5. நேசத்தின் ஊறணியாள் — இலங்கிடும்
நித்தியக் கன்னிமையாள்
வாச மலர்ப்பதமே — இதயங்கள்
வைத்து வணங்கிடுவோம்

## கள்வக் கணக்கன்

ஒரு எசமானுக்கு ஏராளமான சொத்துகள் இருந்தன. அவைகளைப் பராமரிக்க ஒரு கணக்கப்பிள்ளையை அவன் நியமித்திருந்தான்.

கணக்கப்பிள்ளை சரிவரச் சொத்துக்களைப் பராமரிப்பதில்லை என்று எசமான் கேள்விப்பட்டான். உடனே அவனை அழைத்துத் தனது சொத்துகளின் கணக்கை ஒப்பிக்கும்படி கேட்டான். "ஏனெனில், நீ இனிமேல் கணக்கப்பிள்ளை வேலை பார்க்கமுடியாது."

கணக்கன் கள்வன். எசமானுடைய கொடுக்கல் வாங்கற்காரரை அழைத்து, கடன்களைக் குறைத்து எழுதச் சொன்னுன். அதினுல் வேலையிலிருந்து நீங்கியபின் தனக்குப் புகலிடந் தேடினுன். ஏனெனில், அவனுக்குக் "கொத்த வெட்ட இயலாது; பிச்சை யெடுக்க வெட்கம்."

இவைகளை அறிந்த எசமான் கணக்கப்பிள்ளையின் குள்ளத்தனத்தை மெச்சினுன்.

யேசு இந்த உவமையைக் கூறியபின் சொன்னுர்: "அந்நிய தேட்டத்தைக் கொண்டு உங்களுக்குச் சிநேகிதரைத் தேடிக் கொள்ளுங்கள்; நீங்கள் கெட்டு நொந்து போகும் பொழுது அவர்கள் உங்களை ஆதரிப்பார்கள்.

(ஞாயிறு சுவிசேஷத்தைக் கவனிக்கவும்)

## சின்ன யூலியா

அதோ தெருவில் நின்று விளையாடும் சிறுவரின் சம்பாஷணையை உற்றுக் கேட்போம்.

ரோம்— பீற்றர்! நாங்கள் சின்ன யூலியாவின் வீட்டுக்குப் போகிறேம். நீரும் வருகிறீரா? அவள் கடவுளைப்பற்றி எங்களுக்கு நல்ல கதைகளெல்லாம் சொல்லிக் கொடுக்கிறுள்.

பீற்றர் — நான் ஓர் வறியவனுய் இருப்பதாலும், குழப்பக்காரப் பையனுய் இருப்பதாலும் அங்கு நான் வருவதை அவள் சிலவேளை விரும்ப மாட்டாள்.

ரோம் — இல்லை, இல்லை, அவள் இவைகளைக் கவனிக்க மாட்டாள். உன்னை அதிகம் நல்லவன் ஆக்கிவிடுவாள். நீயும் வா.

இவ்வாறு சம்பாஷித்துக் கொண்டே இருவரும் அவள் வீடுபோய்ச் சேர்ந்தனர். அங்கு அநேகம் வறிய சிறுவர்கள் அவளைச் சுற்றிவர இருந்து, அவள் சொல்வதைக் கேட்டுக்கொண்டிருந்தார்கள். பாடசாலைக்குப் போகாத வறிய சிறுவருக்கு அவள் எப்போதும் ஞானோபதேசம் படிப்பிப்பாள்.

இவ்வாறு தனது சின்னச் சிநேகிதருக்கு அவள் உதவி செய்வதைக் குருவானவர் அறிந்தார். ஒருநாள் அவர் யூலியாவை நோக்கி: "உனக்கு முதல் நன்மை பெற விருப்பமா?" என்று கேட்டார். அப்போது அவளுக்கு வயது ஒன்பது. அக்காலத்திலே பன்னிரண்டு வயதுவரை காத்திருக்க வேண்டும்.

சுவாமியாரின் கேள்வி யூலியாவைப் பரவசப் படுத்தியது. அவள் தனது முகம் சந்தோஷத்தால் சொலிக்க, "ஆம், ஆம், சுவாமி! நான் அவரைப் பெற அதிகம் ஆவலாய் இருக்கிறேன்" என்றுள். அப்படியே ஒன்பது வயதில் அவளுக்கு முதல் நன்மை அருளப்பட்டது.

சில தினங்களின் பின் அவளுக்கு ஓர் பெருந் துன்பம் ஏற்பட்டது. சில கொள்ளைக் கூட்டத்தினர் அவள் தகப்பனுரின் கடை ஒன்றை உடைத்துச் சாமான்களை எல்லாம் களவாண்டு கொண்டு போய் விட்டனர். அவள் குடும்பம் இப்போது மிகவும் வறிய நிலைமையிலே காலம் கழிக்க வேண்டியிருந்தது.

அவள் ஓர் வயலுக்குப் போய்க் கஷ்டமான வேலைகள் செய்து சம்பாதிக்கும் சொற்ப பணத்தைக் கொண்டு வந்து தனது குடும்பத்தாரைக் காப்பாற்ற வேண்டியிருந்தது. ஆனல், அவளும் சிறுவந் தொட்டே ஓர் நோயாளி. அதிக வேலை செய்தால் மிகவும் களை கொள்வாள். ஆயினும் அவள் தேவ நேசத்தில் அதிகம் வளர்ந்து கொண்டே வந்தாள். வறிய பிள்ளைகளைச் சேர்த்து முதல் நன்மைக்கு ஆயத்தஞ் செய்து வந்தாள்.

சில வருடங்களின் பின் அவள் வசித்த நாட்டில் வேத கலாபனை உண்டானது. வேத விரோதிகள் குருமார், சந்நியாசர், கன்னியர்களைப் பிடித்துச் சிறையில் அடைத்தனர். அநேகரைக் கொலை செய்தனர். யூலியா தன்னுற் செய்யக் கூடிய உதவிகளைச் செய்து அநேக குருமாரையும், கன்னியர்களையும் காப்பாற்றினுள்.

ஒருநாள் அவளுடைய வீட்டுக்குச் சில சேவகர் வந்து: "இங்கே ஒரு கத்தோலிக்க சிறுமீ இருக்கிறுள்; நாங்கள் அவளைக் கொல்ல வேண்டும்" என்று சொல்லிக் கொண்டே அவளைத் தேடிப் பார்த்தனர்.

யூலியா பிடிபட வில்லை. அவளுடைய சிநேகிதர் சிலர் விரைந்து வந்து அவளைக் கொண்டு போய் ஒரு வைக்கோல் வண்டிக்குள் மறைத்து விட்டனர். தேவன் அவளைக் காப்பாற்றினுர்.

திருச்சபைக்கு இந்தக் கஷ்ட காலம் முடிந்து நல்ல காலம் பிறந்தது. அதனுல் சின்ன யூலியா ஓர் மடத்திற் சேர்ந்து கன்னியாஸ்திரியானுள். அவளும், அவளோடு சேர்ந்த ஏனைய கன்னியரும் சிறு பிள்ளைகளுக்குத் தேவனைப் பற்றிப் படிப்பிக்கும் ஒரு விசேஷ தொண்டில் ஈடுபட்டு உழைத்தனர். தேவ தொண்டிலே தனது வாழ்நாளைச் செலவிட்டாள் யூலியா.

அவளைப் பின்பற்றி இப்போது அநேக கன்னியர்கள் இந்த மகத்தான தொண்டை நடத்தி வருகிறுர்கள். இன்று அவள் "முத்திப்பேறுபெற்ற யூலியா" என்று அழைக்கப்படுகிறுள். வருங்காலத்தில் அர்ச். யூலியா என்று அழைக்கப் படுவாள்.

பிள்ளைகளே! சின்ன யூலியாவைப் போல நீங்களும் தேவனை நேசித்து, அவருக்குத் தொண்டு செய்யும் வரத்தைப் பெற்றுத் தரும்படி அவளைப் பார்த்து ஒருசிறு செபமாவது சொல்ல மறந்து போகாதீர்கள்.

— எம். ஜெயம்

## சரியான விடைகள்

கணிதப்பகுதி:

1. பூனைகள் 100
2. ஆண்கள் 8 அப்பம் 16
பெண்கள் 4 அப்பம் 2
சிறுவர்கள் 8 அப்பம் 2
3. மிகுதியான தேங்காய்கள் 70

வசனப்பகுதி:

1. தேவன் ஏசுவைப் புகழ்
2. "அமலோற்பவம் நாமே"
3. ஒழுக்கமே உயர்குலமாக்கும்
4. (a) தோன்றிற் புகழொடு தோன்றுக
(d) குலைக்கிற நாய் கடியாது கடிக்கிற நாய் குலையாது எனவும் வரும்.

சரியான விடைகள் அனுப்பியவர்களின் பெயர்கள் வருமாறு:

எஸ். மரியம்மா, வங்காலை—*ரி.எம். வேதநாயகம், பத்தாவத்தை—அ. சூசையம்மா கூஞ்ஞை, அரிப்பு — கி. தங்கராணி பீரிஸ், அரிப்பு—வி. பிரான்சீஸ், மன்னுர்—*ச. அன்ரன் கிறிஸ்ரி, ஊர்காவற்றுறை — ச. விறிசிற்ருடயஸ், வங்காலை—றேசலின் லூக்கேஸ் பிள்ளை, இளவாலை—*அ. யேசுதாசன் லீயோன், றோ. க. பாடசாலை, அரிப்பு — எம். டி. அத்தனுஸ், புங்குடுதீவு கிழக்கு-எவ். ரி. இராஜன், புங்குடுதீவு — ஜி. எம். தாஸ், புங்குடுதீவு — எ. அஞ்செலா குரூஸ், வங்காலை—அ. ம. மங்களநாயகம், புங்குடுதீவு — ச. ம. றிச்சேட், ஊர்காவற்றுறை — எஸ். பத்திநாதன், மாதகல்—எஸ். வேபினு கெலன், மாதகல்— *சீ. தேவதாசன் வாஸ், வங்காலை — எ. சோதி குரூஸ், வங்காலை— *சூ. மரியதாசன் குரூஸ், வங்காலை — மி. சோதி மரியதாஸ் குலாஸ், வங்காலை—ஞா. ஜேற்றாட், சுருவில் — *மேரி ஜெனட் நன்சலின் பெர்னுண்டோ, நீர்கொழும்பு — அ. செபஸ்ரியம்மா கூஞ்ஞ, வங்காலை— *பி. பார்சலோன், கொழும்பு—இமல்டா தேவனுயகம், குருனுகல்—*மக்சிமஸ் சேர்ச்சில் பெர்னுண்டோ, நீர்கொழும்பு — சூ. இராக்கினி லீனு, வங்காலை — *ச. யேசுதாசன், அரிப்பு — *ம. செ. கொஸ்தீன், கொழும்பு, 13—*லு. வில்லியம்மா, புங்குடுதீவு—*ஆ. சேவியர் குலாஸ், வங்காலை— யோ. மிக்கேல்பிள்ளை, முல்லைத்தீவு—ம. செ. மாசிலாமணி, புங்குடுதீவு—*க. சவிரிமுத்து, புங்குடுதீவு — பொ. ஐயம்பிள்ளை, புதுக்குடியிருப்பு—மேரி அக்னேஸ் செபஸ்தியாம்பிள்ளை, யாழ்ப்பாணம்— *சீ. க. மகாலிங்கம், புதுக்குடியிருப்பு—ஆ. மொனிக்கா, குலாஸ், வங்காலை—பிலிப் மிக்கேல், புங்குடுதீவு—த. அருள்நேசன்

(அடுத்த பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாய்வ, பேசாலை — *ஆ. நீக்கலஸ் டயஸ், யாழ்ப்பாணம் — *பெ. சிறில், யாழ்ப்பாணம்— *வ. யோ. அரியநாயகம், யாழ்ப்பாணம் — *எஸ். ஸ்ரனிஸ்லாஸ், கணடி — வி. செறாப்பினம்மா, மல்லாகம்—ஜே. ஸ்ரனிஸ்லாஸ் குரேரா, நீர்கொழும்பு—வி. சிவசுப்பிரமணியம், மன்னார்—கொ. இம்மானுவேல், மன்னார்—*பெ. சாள்ஸ், ஊளம்வில்—பொ. திருநாவுக்கரசு, நேரியகுளம்—வ. அன்னம்மா, கரவெட்டி — * எ. கிறிஸ்பின் விக்றர், தியலகொட—*பா. ஜெயதாஸ், அளம்வில் —*ஆர். ஈ. ஏ. பாலேந்திரா, யாழ்ப்பாணம் — யோ. அருளானந்தம், மண்டைதீவு — அ. மேரி றோஸ்மலர், யாழ்ப்பாணம்—*அ. சூசைப்பிள்ளை, இளவாலை — * மரிய லொறெற்று நீக்கிலாப்பிள்ளை, சில்லாலை —*மேரி பிலோமினு, குளமன்கால்— அ. ஜெய மேரி திரேஸ் குரூஸ், பேசாலை— கே. செபமாலைமுத்து, மல்லாகம்—*வி. செறுபினம்மா, குருநாகல் —*கு. செபமாலைமுத்து, குளமன்கால் —*எஸ். யோகநாதன், யாழ்ப்பாணம் —*செ. பத்திநாதர், மல்லாகம்—எம். எஸ். அலோசியஸ், யாழ்ப்பாணம— எஸ். ஜெம்மா யஸ்மினு, சில்லாலை— * சா. மரியதாஸ் செல்வரத்தினம், நுகயகொடை—க. மேரிஅண்ணு, மாதகல் — செபஸ்ரியான் சொானம்மா லெம்பேட், வங்காலை — செ. றெ. அ. ஸவாஸ், சில்லாலை—எஸ். பத்திநாதர், மல்லாகம் — ஆ. யோசப் பிளசிடஸ், மாதகல்—*ஆ. சேவியர் குலாஸ், வங்காலை — எஸ். டி. சகாயம, வெளிப்பெண்ன—ஆ. மேரி மாட்டினு, மாதகல் — நா. இரத்தினசபாபதி, வதிரி, கரவெட்டி—ச. சாமிநாதர், கரவெட்டி — சவிரிமுத்து அந்தோனிப்பிள்ளை, விடத்தல்தீவு —ஜெறோம் பிறுங் மரியாம்பிள்ளை, சில்லாலை — மாட்டின் மாக்கஸ், நீர்கொழும்பு—அ. டேவிட், வதுளை — *மேரி றீற்று லோவ், நீர்கொழும்பு—*ஆ. சூ. துரைராசசிங்கம் இளவாலை — எ. றோக், யாழ்ப்பாணம — * மேரி ஜெட்றூட், நீர்கொழும்பு— *செ. புஷ்பம், மன்னார்— எஸ். இன்னுசிமுத்து, தன்னுமுனை —*மரியம்மா யோண்பிள்ளை, மிருசுவில் — *செ. றீற்று கொண்சி, கடற்கரைத்தெரு, நீர்கொழும்பு — பா. ஸ்ரீபின் வெண்டக்கோன், செம்பியன்பற்று—வி. பீற்றர், வதிரி, கரவெட்டி—மேரிகிறேஸ் சந்தியாப்பிள்ளை, முல்லைத்தீவு—சூ வியலிறிஸ், நீர்கொழும்பு—கா. மதார் சாகிபு முதலியாகுளம்—ஆ மோசேஸ் வில்பிறெட், சில்லாலை, பண்டத்தெருப்பு— ஆ. மொனிக்கம்மா குலாஸ், வங்காலை — அ. மேர்ஜி ஆஞ்சலா குரூஸ், பேசாலை —*ஜேலி அன்ரன் ஹில்பேர்ட், மரியாம்பிள்ளை, வெள்ளவத்தை — *றை. மேரி றீற்ற, திரிகோணமலை — *நாகரத்தினம் திரிகோணமலை — *ச. செசிலியம்மா, முதலியாகுளம்.

* இவ்வடையாளம் இடப்பட்டவர்கள் ஒருபகுதிக்கு மாத்திரமே விடை கொடுத்திருந்தார்கள்.

## கண்டறியுங்கள்

**( இந்த நான்கு வசனங்களிலும் ஓர் அர்ச்சியசிஷ்டரின் பெயர் அடங்கியிருக்கின்றது. )**

1. அவன் பெயர் அமிர்தநாயகமும் அல்ல, பாக்கியநாதனும் அல்ல, சாமிநாதர்.

2. ஒருவிஷயத்தைப் பற்றி எழுதச் சொன்னுல் அவன் பத்தி பத்தியாக வரைந்து விடுவான்.


3. வகுப்பில் அவன் ஆரும்பிள்ளையும்அல்ல, எட்டாம் பிள்ளையும்அல்ல, பத்தாம்பிள்ளை.

4. அர்த்த சந்திரன் அர்ச்சுனன் வீட்டிலும் பிரகாசிக்கின்றது.

® [illegible]

— ஜே. ஏ. ஜீ.

# பாப்பானவராகத் தெரியப்பெற்ற சுபசெய்தி



பாப்பானவராகத் தெரியப்பெற்றவரைச் சிஸ்ரைன்சிற்றுலயத்தின் ஆயத்த அறைக்கு அழைத்துச் சென்றார்கள். அங்கே அவர் வெளைஉடை அணிந்து, மொசெற்றுவையும்—அதாவது விளிம்புகளில் தோல்தைத்த சிவப்பு அங்கியையும் தரித்துக் கொண்டார். கருதினுல் ஒரெகிளியா செம்படவனின் கணையாழியை அவர் விரலில் அணிந்தார்.

கருதினுல்மார் முறைமுறையாகவந்து, ஆசாரமுறைப்படி முழந்தாள் மடித்துச் சம்பேதுருவானவரிடமாகத் தெரிவுசெய்யப்பட்ட புதியவருக்குத் தங்கள் வணக்கத்தைச் செலுத்தினுர்கள். இது நடந்துகொண்டிருக்கும் பொழுது கடைசியான வாக்குச்சீட்டுகள் எரிக்கப்பட்டன. இம்முறை நனைந்த வைக்கோல் அவைகளுடன் எரியவில்லை. ஆகையால், சம்பேதுருவானவர் மகாலய சதுக்கத்தில் குழுமிநின்ற பிரமாண்டமான சனக்கூட்டம் வெண்மையான புகையைக்கண்டதும் புதியபாப்பானவர் தெரிவுசெய்யப்பட்டுவிட்டாரென்று அறிந்துகொண்டது. அவர்களிடையே ஆரவாரம் மிகுந்தது. சம்பேதுருவானவர் மகாலய நடுவாசலுக்குமேல் இருந்த மாடத்தைநோக்கி அவர்களது கண்களும், படக்காரரின் பெட்டிகளும் திரும்பின. வாழ்த்தொலிகள் அங்குள்ள கட்டடங்களைத் தகர்த்துவிடும்போல் இருந்தன.

மேல்மாடத்திலுள்ள யன்னல் சடுதியாய்த் திறக்கப்பட்டது. அவ்விடத்தில் கருதினுல் மக்கியா ஆண்டவர் நின்றார். தேர்தற்குழுவும் நின்றது. "எமக்கு ஒரு பாப்பானவர் உண்டென்ற சுபசெய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன்; அவர் யாரெனில், மகா ஆசாரத்துக்குரிய யுசெப்பெ சார்த்தோ ஆண்டகைதான்; இவர் பத்தாவது பத்திநாதர் என்ற நாமந்தரித்துக் கொண்டார்" என்று உரத்தசத்தமாய் அவர் கூறினுர்.

## குறும்பு மூளை

ரசாயன சாஸ்திர ஆசிரியர் வெவ்வேறு திராவகங்களின் குணங்களை விளங்கப் படுத்திக்கொண்டிருந்தார்.

"பாருங்கள், இந்த வெள்ளி ரூபாவை; இந்த லோட்டாவில் உள்ள திராவகத்தில் போடுகிறேன்; அது கரையுமா?

பின் வாங்கில் இருந்த இரத்தினன்: "இல்லை ஸார்" என்ருன்.

"இல்லையா?" என்று ஆசிரியர் ஆச்சரியத்துடன் கேட்டுவிட்டு: "ஏன் இந்த வெள்ளிரூபா கரையாது என்று விளங்கப்படுத்து பார்க்கலாம்."

இரத்தினன் சற்றே தொண்டையைச் செருமிக் கனைத்து விட்டுச் சொன்னுன்: "அது கரையுமென்ருல் அதற்குள் அதைப்போட மாட்டீங்க ஸார்."

* * *

உனது வீட்டு இலக்கத்தை எழுது.
அதை இரட்டிப்பாக்கு.
ஐந்தைக் கூட்டு.
50-ஆல் பெருக்கு.
உன் வயதைக் கூட்டு.
365-ஐக் கூட்டு.
615-ஐக் கழி.

மறுமொழியாக உனது வீட்டுஇலக்கத்திற்கு முன்னுல் உன் வயது வருகிறது.

சீ. க. மகாலிங்கம்,
ஆர். சி. பாடசாலை, புதுக்குடியிருப்பு.

● விசியேபதியில் நவமாகக்கட்டியெழுப்பப் பட்டிருக்கும் அர்ச். சின்னத்தெரேசம்மாளின் மகாலயத்திலுள்ள பக்கப்பலிபீடங்கள் பதினுறிலும் போலிஷ்பலிபீடமும் ஒன்ருகும். இந்த மகாலய அபிஷேகவைபவத்தில் நாடு கடத்தப்பட்ட போலிஷ் அதிமேற்றிராணியாரான ஜே. கோவினுஆண்டவரும் கலந்துகொள்ளலாயினர்.

## கல்வி

கல்வியைப்பற்றிப் "பொன்" அவர்கள் பாடி வெளியிட்ட பாவடி போன்று பாடி அனுப்பியவர்களின் சில பாவடிகள் வருமாறு:

1

மண்ணினில் மாபெரும் போடா—கல்வி
மாண்புறக் கற்றிடப் பாரடா
மன்னனிற் கற்றவன் மேலடா—கல்வி
மானிலம் போற்றிடக் காலடா

2

தீயினில் வேகாத சொத்தடா—கல்வி
தேடற் கரியதோர் முத்தடா
தீர உணர்ந்ததைக் கல்லடா—எட்டுத்
திக்குமே போற்றிட நில்லடா

ஏ. சந்தலூசியா
இளவாலை

கல்வியைக் கற்றிட எண்ணடா—நிதம்
கற்பதே உன்னிரு கண்ணடா
கல்வியிலான்செல்வம் மண்ணடா-புதுக்
காரியம் கல்வியால் பண்ணடா

ச. லில்லி
மாவிலங்கேணி

1

வெள்ளத்தில் அழியாத செல்வமாம்—பூவில்
வேந்தர்க்கும் பணியாத செல்வமாம்
கள்ளர்க்கும்கிட்டாத செல்வமாம்-அது
கரையிலாக் கடல்போலும் செல்வமாம்

2

அள்ளவும் குறையாத செல்வமாம்-அது
ஆனந்த நிறைவான செல்வமாம் [அது
உள்ளத்தின் ஒளியான செல்வமாம்—
உலகத்தின் முதலான செல்வமாம்

ச.சந்திரசேகரம்
முதலியாகுளம்

1

கல்வி கருந்தனம் மெய்யடா—அதைக்
கற்பதில் நீமனம் வையடா [அதைச்
செல்வம் அழிந்திடும் மெய்யடா —
சேர்ப்பதைக் கைவிட்டு உய்யடா

2

முத்தமிழ் தேன்நிறை ஆறடா—அதில்
முக்குளித் தேநிதம் ஊறடா
வித்தக ஞகநீ தேறடா—பலர்
வேண்டிடும் நற்கவி கூறடா

ஜே. ஜே. டபிள்யு.
காம்பன்

## விடை கண்டுபிடியுங்கள்

1 எலிசபேத் மகாராணியார் இலங்கைக்கு வந்தபோது மரியாதைக்காகத் தீரப்பட்ட பீரங்கிகளின் வெடிச்சத்தம் எங்கே கேட்டது?

2. அரச தம்பதிகள் பவனி சென்ற மோட்டர்கார் ஓடும்போது அதற்கு முன் ஓடியது என்ன?

3. இலங்கை விஜயத்தின்போது இந்திய ஹைகம்மிஷனர் திரு. தேசாய் அவர்கள பண்டிதநேரு அவர்களுக்கு அளித்த விருந்திலே கலந்துகொண்ட எல்லோரும் சாப்பிட்டவைகள் எவை?

4. ஆசியப் பிரதமர்கள் மகா நாட்டிற்கெனக் கொழும்பிற்கு வந்த முதல் அமைச்சர்களை வரவேற்றுப் போன வழியில் என்ன நடந்தன?

5. எவறெஸ்ரை ஏறிவென்ற வீரர் திரு. டென்சிங், பாக்கு நீரிணையை நீந்திவென்ற திரு. நவரத்தினசாமி ஆகிய இருவரும், இடைவிடாது எப்பொழுதுமே செய்துகொண்டிருக்கும் தொழில்என்ன?

6. ஆண்கள் வெட்ட வெட்டத் தழைத்துப் பெண்குழந்தைகளுக்கு அழகைத்தருவது எது?

7. சுகாதார முறைப்படி நடக்கும் மனிதன் எவ்வளவுகாலஞ் சீவிக்க முடியும்?

8 சுகந்த மலரின் நறுமணம் எங்கே வீசும்?

9. வெளிச்சமுள்ள இடங்களில் எதைக் காணமுடியாது?

10. நாம் எவ்வெப் பொழுது உணவு அருந்தவேண்டும்?

❁ இந்தக் கேள்விகளுக்குரிய விடைகள் சாதாரண இயற்கைத் தன்மை உடையனவையன்றி, ஆராய்ச்சிக் குரியன அல்ல. ஆனுல், விடைகளைக் கண்டுபிடித்தபின் என்னைக் கேலிசெய்ய வேண்டாம். கேள்விகளுக்குப் பதில் தெரியாதிருந்தால் மற்ருேர்இடத்தில் காண்க.

எஸ். எல். சவுந்தரநாயகம்

● அமெரிக்க ஐக்கியதேசத்திலே சிகறெற்புகைத்தல் குறைந்துகொண்டு வந்தபோதிலும் இவ்வருடத்தின் முதல் மூன்று மாதங்களிலும் அங்கு 9,660 கோடி சிகறெற்றுகள் செய்யப்பட்டிருக்கின்றன. இவற்றில் 8,790 கோடி சிகறெற்றுகளும், அவற்றின்விலையாகிய கோடிக்கணக்கான டலர்களும் புகையாய்ப்போயிருக்கின்றன.

● உலகில் அதிகந்தீவிரவேகமுள்ள மனிதரென்று லெவ்ரினன்ட் கொ்ணல் ஜோண் ஸ்ராப்எனும் அமெரிக்கவிமானி அறியப்படுகின்ருர். இவர் சமீபத்திலே அங்கு ஹொல்கன்ஆகாயப்படைத்தளத்தில்நடைபெற்ற பரிசோதனையின் போது, றொக்கெற்கொண்டு இயக்கப்பட்ட ஆகாயவிமானம் ஒன்றை மணித்தியாலம் 421 மைல் வேகத்தில் செலுத்திச்சென்ருர்.

● செயற்கைறப்பரை அதிகமாகச் செய்வதற்கானதிட்டங்கள் அமெரிக்க ஐக்கியதேசத்திலும், பிரித்தானியிலும் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. தற்போது ஜேர்மனியிலே றப்பர்க்கைத்தொழில் உற்பத்தியாளர்கள் வருடம்ஒன்றுக்கு 30,000 தொன் செயற்கைறப்பர் உற்பத்திசெய்யக்கூடிய யந்திரசாதனங்களை அமைக்க ஆயத்தப்படுகின்ருர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேத வினுவிடை

### — VIII —

### ஆவியானவர் எங்களை அர்ச்சிப்பவர்

### 7. நீதி

**139.** நீதி ஆவது என்ன?

சருவேசுரனுடைய பிரமாணத்தின்படி பிறருக்குச் சேரவேண்டிய உரிமைகளைச் செலுத்தப்பண்ணுகிற புண்ணியமே நீதியாம்.

"சருவேசுரனுடைய இராச்சியம் அன்னமும் பானமும் அல்ல; அது நீதியும் சமாதானமுமாம்." — உரோ. XIV. 17.

**140.** பிறருக்கு உரிமைகளைச் செலுத்துவதைவிட வேறு எதையும் நீதி என்கிறோமா?

ஆம், அகண்டகருத்தின்படி சருவேசுரனுக்கும் நமக்கும் பிறருக்கும் நாம் செய்யவேண்டிய கடமைகள் யாவையும் செய்து தேவபிரசாத நிலையில் இருப்பதையும் நீதிஎன்கிறோம். ஆகையால் அகண்ட கருத்தின்படி நீதியும், பரிசுத்தமும் ஒன்றுதான்.

**141.** பிறர் சிநேகத்திற்கும் நீதிக்கும் இடையிலுள்ள வித்தியாசம் என்ன?

பிறத்தியாரை நமக்குச் சேர்ந்த நன்மையாக விரும்புவதைத் தேவசிநேகத்தால் மட்டுப்படுத்துவதுதான் பிறர்சிநேகம். ஆனால், பிறத்தியாரை நமக்குப் புறம்பானவராக எண்ணி அவருடைய உரிமைகளைச் செலுத்துவதுதான் நீதி. மேலும் நீதியினால் பிறத்தியாருக்கு நிதானமாய்ச் சேரவேண்டிய உரிமைகளை மாத்திரம் செலுத்துகிறோம். ஆனால், பிறர்சிநேகத்தினால் நமக்குப் பிறத்தியார் செய்யவேண்டுமென்று நாம் விரும்புகிற எல்லாவற்றையும் அவருக்குச் செய்கிறோம்.

**142.** நித்திய சீவியத்திற்கு நீதி அவசியமா?

ஆம், அநீதர்கள் சருவேசுரனுடைய இராச்சியத்தைச் சுதந்தரித்துக் கொள்ள மாட்டார்கள் என்று வேதாகமத்தில் வாசிக்கிறோம். (1.கொ. VI.9.)

**143.** நீதி என்னும் முக்கிய புண்ணியத்தின் கிளைப் புண்ணியங்கள் எவை?

நேர்மை, மதிப்பு, தாட்சணை, நிதானம், பாதுகாப்பு, பிரமாணிக்கம், சபைநீதி என்பவைகளாம்.

**144.** இந்த ஏழுபுண்ணியங்களையும் ஏன் நீதியின் கிளைப்புண்ணியங்கள் என்கிறோம்?

ஏனெனில் நீதிபொதுவாகப் பிறருக்குச் செலுத்தும் உரிமையாகிய (1) உண்மையை நேர்மையும், (2) கீர்த்தியை மதிப்பும், (3) சுயாதீனத்தைத் தாட்சணையும், (4) சொத்தத்துவத்தை நிதானமும், (5) சிவசேமத்தைப் பாதுகாப்பும், (6) விவாகபந்தனையைப் பிரமாணிக்கமும், (7) கூட்டுறவைச் சபைநீதியும் தனித்தனியே செலுத்துவதினலேயாம்.

**145.** நீதியின் ஏழுகிளைப் புண்ணியங்களையும் எந்தெந்தக் கற்பனைகள் கற்பிக்கின்றன?

"பொய்ச்சாட்சி சொல்லாதே" என்னும் தேவகற்பனை நேர்மையையும் மதிப்பையும்; "கொலைசெய்யாதே" என்னும் தேவகற்பனை தாட்சணையையும் பாதுகாப்பையும்; "களவுசெய்யாதே, பிறர்பொருளை அபேட்சியாதே" என்னும் தேவகற்பனைகள் நிதானத்தையும்; "விபசாரம் செய்யாதே, பிறர்தாரத்தை அபேட்சியாதே" என்னும் தேவகற்பனைகள் பிரமாணிக்கத்தையும்; "பிதாமாதாவைச் சங்கி" என்னும் தேவகற்பனை சபைநீதியையும் கற்பிக்கின்றன.

(தொடரும்)

## சுகாதாரவிழா

பேசாலையைச்சேர்ந்த துள்ளுகுட்டிக் குடியிருப்புக் கத்தோலிக்கபாடசாலையில்சென்ற 21-7-54 சுகாதாரவாரவிழாகொண்டாடப்பட்டது. மாலை 5 மணிக்குக் கிராமமுன்னேற்ற சங்க உத்தியோகஸ்தர்கள், சுகாதாரபரிசோதகர், பெற்றோர், பிள்ளைகள் பாடசாலையில் குழுமியிருக்க, கட்டளைக்குரவர் வண. எ. லெபோண் சுவாமியவர்கள் தலைமை தாங்கினர். அவ்வமயம் பாடசாலைஆசிரியர் பி. இராயப்பு அவர்களது ஆரம்பஉரையின்பின் சுகாதாரபரிசோதகர் சுகவழியின் அவசியம், அதற்காக மக்கள்செய்யவேண்டியன எவை என்பனபற்றி ஓர்சொற்பொழிவாற்றினர். பின்னர் வண. தலைவர் சுவாமியவர்களால் பரிசில்கள் வழங்கப்பட்டன. வீட்டுச்சுத்தத்திற்காகத் திரு. எம். நாவுருப்பிச்சை அவர்களும், உடைச்சுத்தம், நல்லொழுக்கம், வரவுஒழுங்குக்காகப் பாடசாலைமாணவர்களும் பரிசில்கள் பெற்றனர். தொடர்ந்து சுகாதாரட்பாக்கள், நடனம், மலேரியாக்காய்ச்சல்பற்றிய நடித்தல்என்பன சிறுர்களால் நடத்தப்பட்டன. பின்னர் தலைவர்சுவாமியவர்கள் பாடசாலைமட்டில் பெற்றோர் ஆசிரியருடன் நன்கு ஒத்துழைப்பது தமக்குச் சந்தோஷமென்றும், சிறப்பாகச் சுகசீவியத்தைக் கவனிக்கவேண்டுமென்றும் கூறினர். ஈற்றில் அவரது ஆசீருடன் விழா இனிதே முடிவாயிற்று. — நிருபர்

## 5-ம் வருட நிறைவுவிழா

நாவாந்துறைவடக்கு, சென்மேரீஸ் சனசமூகநிலையத்தின் ஐந்தாம்வருட நிறைவுவிழா சென்ற 25-7-54 ஞாயிற்றுக்கிழமைகாலை 8 மணிமுதல் நிலைய மண்டபத்திலே பதினொராம்வட்டாரப் பிரதிநிதி காதி வி. எம். எம். அபூசாலி அவர்கள்தலைமையில் 48 அங்கத்தவர்கள் சமூகமாகச் செபத்துடன்ஆரம்பமாயிற்று. காரியதரிசியால் வருடாந்த அறிக்கையும், தனதிகாரியால் வருடாந்தவரவுசெலவுக்கணக்கும் வாசித்து ஏகமனதாய் அங்கீகரிக்கப்பட்டதும் பின்வருமாறு புதுவருடஉத்தியோகஸ்தர்கள் தெரிவுசெய்யப்பட்டார்கள். பாதுகாவலர்கள் — திரு. சாம். ஏ. சபாபதி (மேயர்), காதி வி. எம். எம் அபூசாலி, 11-ம் வட்டாரப் பிரதிநிதி தலைவர் — திரு. கி. சூசைப்பிள்ளை (புலவர்). உபதலைவர்—திரு. ம. ஆசீர்வாதம். காரியதரிசி— திரு. நீ. இன்னசிமுத்து. உபகாரியதரிசி — திரு. சூ. அமிர்தநாதர். தனதிகாரி—திரு. நீ. ஆசீர்வாதம். பொதுநிர்வாகசபையினர் — திருவாளர்கள் கி. மரிசலீன், யோ. மரியதாஸ், கி. நீக்கிலாப்பிள்ளை, ம. மனுவற்பிள்ளை, செ. மைக்கல்தாஸ், அ. இராயப்பு, ச. ஞானப்பிரகாசம். பின்னர் தலைவர்உரையுடனும், உபதலைவரின் நன்றியுரையுடனும், செபத்துடனும் விழாநிறைவாயிற்று.

நீ. இ.

## கேள்விக்குப் பதில்

1. செவிகளிற் கேட்டன.
2. சாரதியின் பார்வை.
3. பற்பல உணவு வகைகள்.
4. கால்கள்தான் நடந்தன.
5. சுவாசித்தல்.
6. மயிர்.
7. இறக்கும் வரையிற் சீவிக்கலாம்.
8. நாசியில்.
9. இருளை.
10. நன்றாய்ப் பசியுண்டாகும் வேளைகளில்.

❁ஜோர்தான்நாட்டின் ஹ ைசேயின் மன்னர் சமீபத்திலே ரோமாபுரிக்குத் தமது பிரத்தியேக விஜயத்தின்போது வத்திக்கான்மாளிகைசென்று பரிசுத்த பிதாவைச் சந்தித்[illegible]

## சுகாதாரவிழா

புங்குடுதீவுக் கத்தோலிக்கபாடசாலை மண்டபத்திலே சென்ற 23-7-54 வெள்ளிக்கிழமை தலைமை ஆசிரியர் பண்டிதர் எம். கே. கே. அருட்பிரகாசம் அவர்கள்தலைமையில் இவ்விழா சிறப்பாகக் கொண்டாடப்படலாயிற்று. முந்தத் தலைவர்அவர்கள் திருக்குறள் ஆதாரத்துடன் சுகாதாரம்பற்றிய பல விஷயங்களைவிளக்கி அழகாகப் பேசினர். சுகாதாரபரிசோதகர் நா. சந்தனராசாபேசுகையில்: பொதுமக்கள் சுகமாகவும், சுத்தமாகவும் வாழவேண்டுமென்றும், அரசாங்கம்செய்யும் உதவிகளைச் சகலரும் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்றும், ஒவ்வொருகுடும்பமும் சுத்தமாய்வாழ்வதற்கு வேண்டிய அணிகளைத் தங்கள் இல்லங்களில் வகுத்துவைத்திருத்தல வேண்டுமென்றும்குறிப்பிட்டார். பின்னர் பாடசாலை மாணவர் மாணவிகளின் பேச்சுப் போட்டி ஆரம்பமானது. மேற்பிரிவுப் போட்டியில் மி திரேசம்மா முதலாமிடமும், ஏ. சொபாயா இரண்டாமிடமும், சூ. யோசேப் மூன்றாமிடமும் வகித்தனர். மத்தியபிரிவில் ம. பிரசாதநாயகம் முதலாமிடமும், மு அந்தோனி இரண்டாமிடமும், ச. சர்வாசி மூன்றாமிடமும் வகித்தனர். கடைசியாகப் பாலர்வகுப்பு மாணவிகளின் நடனத்துடன் விழாநிறைவேறியது.

— பி. ச.

## சந்தியோகுமையோர் திருநாள்

விடத்தல்தீவிலே இத்திருநாள் வழமைபோலச் சென்ற 25-7-54 ஞாயிறுவாரம் கொண்டாடப்பட்டது. அதற்கு ஆயத்தமான நோவனைகள் 16-7-54 வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாயின. 24-ந் தேதி பிற்பகல் கட்டளைக்குரவர் வண. ஒம்லோ சுவாமியவர்களால் வேஸ்பர்பாடிச் சற்பிரசாத ஆசீர்வாதமும் அருளப்பட்டது. 25-ம் தேதி காலை திருநாட் பாடற்பூசையிலே பாடகர்குழாம் பாடியகீதங்கள் பாலொடு தேன்கலந்தாற்போன் றிருந்தன. பூசைமுடிவிலே சந்தியோகுமையோரின் திருச்சுரூப சுற்றுப்பிரகாரத்தின்போது பாடசாலைமாணவரும், அர்ச். தெரேசம்மாள் கூட்டப் பெண்களும் இனியகீதங்கள் படித்தார்கள். ஈற்றில் திருச்சுரூப ஆசீர்வாதத்துடன் திருநாள் நிறைவாயிற்று. ச. அ.

## மரணசங்கதி

கரவெட்டியிலே உயர்வேளாண் மரபினராய், செல்வம்செல்வாக் குடையராய் விளங்கியிருந்த திரு. மரியாம்பிள்ளை வஸ்தியாம்பிள்ளை அவர்கள் விருத்தாப்பியநோய்கண்டு அந்திய தேவதிரவிய அனுமானங்களைப்பெற்றுத் தமது 82-ம் வயதிலே இம்மாதம் 10-ந் திகதிசனிக்கிழமை காலஞ்செல்லலாயினர். பருத்தித்துறைப் பட்டினசங்க கந்தோரில்கடமையாற்றும் திரு. வ. சிங்கராசா, யாழ்ப்பாணத்திலே றெயில்வேப்பகுதித் திக்கற்பரிசோதகர் வ. கைசிந் இராசேந்திரம், மலாய்நாட்டிலே பி. டபிள்யூ. டி. ஓவசியர் வ. சாமிநாதர் எனும் மூவரும் இவரின் புதல்வர்கள். அல்வாய்க் கத்தோலிக்க பாடசாலைத் தலைமையாசிரியர் அருளப்பு அவர்களின்பாரியார் ரோசம்மா இவரின் புதல்வியாவர். இவரின்பிரேதசேமமானது மறுநாள் திரளாண இனசனரும், பிறரும் கூடியசமுகத்திலே வண. பி. ஈ. அல்பிறெட் சுவாமியவர்கள் துக்கசங்கீதம்பாடிக்கடைசிஆசீர்வாதம் கூறிநிற்கச் சிறப்பாகநடந்தேறியது.

R. I. P.

## ஊர்காவற்றுறை

ஊர்காவற்றுறை மேற்குத்திசையில் கோவில்கொண்டிருக்கும் சந்தியோகுமையோரின்திருநாள் மிகவும்பத்திசிறப்பாகக் கொண்டாடப் பட்டது. சந்தியோகுமையோரின் திருச்சடலம் இரண்டாவதுமுறையாக அடக்கஞ் செய்யப்பெற்ற கொம்பஸ்தெல்லா நகருக்கு யூபிலிவருடமாக இவ்வருடத்தைப் பரிசுத்தஸ்தானம் அனுமதித்ததைமுன்னிட்டு, இக்கோவிற்கிறீஸ்தவர்கள் தங்கள் பாதுகாவலரின் திருநாளை இவ்வருடம் விசேஷித்தவிதமாகக் கொண்டாடுவதிலே பேரார்வங் கொண்டிருந்தனர். மாலை ஆராதனைகள் வழமைபோலக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாயின. 24-ம் திகதி இரவு சந்தியோகுமையோரின் திருச்சுரூபத்தை மின்சார தீபங்களாலும், மலர்மாலைகளாலும் அழகுறச் சிங்காரித்த கூட்டிலே எழுந்தருளச்செய்து அதனை மோட்டார்ரதம்தாங்கி மத்தியிற்செல்ல, பாண்டு வாத்தியங்கள் முழங்க, தீபாலங்காரத்துடன் சோபிதமுற்றுத்துலங்கிய வீதிகள்வழியாகச் சுற்றுப்பிரகாரமாகக் கொண்டு மீண்டும் ஆலயத்தைஅடைந்ததும் வண. ஏ. மைக்கேல்சாமி சுவாமியவர்கள் சந்தியோகுமையோரின் பரிசுத்தவாழ்க்கையின் அதிமுக்கியமான சம்பவங்களை எடுத்துக்காட்டி இனிய தமிழ்நடையிலே அரியதோர் பிரசங்கஞ்செய்தார். பின்னர் வண. ஜே. வேதநாயகம், வண. ஏ. மைக்கேல்சாமி சுவாமிகள் இருவரும்துணைபுரியக் கட்டளைக்குரவர் வண. வி. ஆர். தார்சீசியஸ் சுவாமியவர்களால்வேஸ்பர்பாடி ஆசீர்வாதம் அருளப்பட்டது. மறுநாள்காலை நிறைவேறிய பெரியபாடற்பூசையோடு திருநாள்முடிவாயிற்று.

— கண்டுமகிழ்ந்தோன்

## சுகாதாரவிழா

### "விஞ்ஞானஅறிவே விருத்திக்குவழி"

பேசாலை, பாத்திமா ஆண்பாடசாலையில் நடந்த சுகாதாரவிழாவில் பங்குபற்றிப் பேசுகையில், மன்னூர்ப்பகுதி வித்தியாதரிசி எஸ். நவரத்தினம்அவர்கள் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். தொடர்ந்து அவர்பேசுகையில்: "பாடசாலைகளில் பொது விஞ்ஞானத்தை முறையாகக் கற்பதினால் வியாதிவருந்தம் வரும்போது வைத்தியசாலையை நோக்கி ஓடவேண்டிய அவசியம்இல்லாமல், வீட்டிலேயே தகுந்த ஆரம்ப சிகிச்சைகளைச்செய்து அதைப் பரிகரிக்கக்கூடியதாய் இருக்குமென்றும், தொழில்களை அதிகசிரமமும், செலவும்இன்றி விரைவாகவும், சிறப்பாகவும் முடிக்கலா"மென்றும்கூறிப் பாடசாலையில்உள்ள விஞ்ஞானசாலையின் வளர்ச்சிக்கு உதவும்படியாகப் பெற்றாரைக் கேட்டுக்கொண்டார்.

விழாவிலே கரிசல், துள்ளுக்குட்டிக் குடியிருப்பு, பேசாலை ஆண், பெண் பாடசாலைகள் பங்குபற்றின. மன்னூர் எம். ஓ. எச்., பேசாலைப்பகுதிச் சுகாதாரப்பரிசோதகர், மன்னூர்-மாதோட்டப்பகுதி வித்தியாதரிசி, பேசாலைக்கட்டளைக்குரவர் வண.ஏ. லெபோண்சுவாமியார், மன்னூர்மேற்குக் கிராமச்சங்கத்தலைவர் சந்தியாகு டயஸ், மன்னூர் மேற்குச் சமாதானநீதிபதி திரு. ஜே. வி. பல்டானோ முதலிய பிரமுகர்கள் பங்குபற்றி விழாவைச் சிறப்பித்தனர். பேசாலை ஆண்பாடசாலையின் சுகாதார சம்பந்தமான சிறுநாடகத்துடன் விழா நிறைவெய்தியது.

— நிருபர்

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, July 29-1954

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org